மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

V.K. PICHAI KARUR NEWS AGENT

அறப்போர் சிறப்பு மலர்

7·8·1960 : விலை 30 காசு

Anand...

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 7-6-60 ஒலி 39, 40

கறுப்புக் கொடி! கறுப்புக் கொடி!!

சென்னையில் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், நமது மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இட்ட கட்டளையை, இலட்சக் கணக்கான இளைஞர்கள் முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொண்டு—"வெற்றியோடு திரும்புகிறோம் அண்ணா, வெற்றியோடு திரும்புகிறோம்—தமிழன் மானத்தைக் காத்துத் திரும்புகிறோம்—தமிழன் வீரத்தை நிலை நாட்டித் திரும்புகிறோம் அண்ணா. தமிழன் வீரத்தை நிலை நாட்டித் திரும்புகிறோம்" என்று சபதம் செய்து புறப்பட்டிருக்கின்றனர்!

இந்தியத் துணைக் கண்டத்து குடியரசுத் தலைவர்—இந்தி மொழி திணிப்பைப் பற்றி நாம வைத்த வேண்டுகோளை கவனிக்காமலேயே, அதைப் பற்றி சொஞ்சமும் சிந்திக்காமலேயே, நம் மையெல்லாம் அலட்சியம் செய்து விட்டு, தமிழகத்துப் பெருங்குடி மக்களை யெல்லாம் துச்சமென மதித்து ஏதும் பதில் தராமலேயே தமிழகத்திற்கு வருகிறார்! சுதந்திரத் திருநாள் கொண்டாட சென்னைக்கு வருகிறார்!

நம்மைப் பற்றி அவருக்குத் தெரியாது-நாம் யாரென்பது அவருக்குப் புரியாது! இங்குள்ள தாசர்களும் நம்முடைய வலிவை, நம்முடைய பொலிவை அவருக்கு எடுத்துச் சொல்லி இருக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல—கீர்த்தி பெறுவதற்கும், கித்தாப்பைக் காட்டிக் கொள்வதற்கும், விருது பில்லைகளை பெறுவதற்கும், தோடாக்களை அணிந்து கொள்வதற்கும், பதவியை பட்டா வாகக் கொள்வதற்கும், அதிகாரத்தை சாசுவதமாக நிலை நாட்டிக் கொள்வதற்கும்—நம்மைப்பற்றி மிக மிக குறைத்தே கூறி இருப்பார்கள்! பாபு ராஜேந்திர பிரசாத்தும் இவைகளை உண்மை என்றும் நம்பி இருப்பார்! அதனால் தான் அவரும் தமிழகத்திற்கு தைரியமாக பவனி வருகிறார்!

இந்த நிலையில்—அவருக்கு நம்மைப் பற்றித் தெரிவிக்க நம்முடைய வலிவைப் பற்றிக் காட்டிக் கொள்ள—"தென்னகத்து மக்கள் இந்தியை எதிர்க்கிறார்கள்' என்பதை தெளிவாக எடுத்து விளக்க அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது தான் சாலச் சிறந்த முறையாகும்! எனவே தான் நமது மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார்கள்!

கறுப்புக் கொடி காட்டுவதால் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் மதிப்போ, மரியாதையோ ஒன்றும் குறைந்து விடாது! அவருடைய புகழ் குன்றி விடாது! அவருடைய பெருமை அழிந்து விடாது!

எதிர்ப்பை தெரிவித்துக் கொள்வதற்கு நாகரீகமான அரசியல் வாதிகள் கையாளும் நாகரீக முறைகளில் ஒன்று தான் இதுவும்!

உலக அரசியல் வாதிகள் அனைவரும் இந்தக் கறுப்புக் கொடி காட்டும் முறையைக் கையாண்டிருக்கிறார்கள்! உலக அரசியல் வாதிகள் கையாண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவதை விட—இன்றைய தினம் கறுப்புக் கொடி என்றாலே கதி கலங்கும் காங்கிரஸ்காரர்களே இந்த முறையைக் கையாண்டிருக்கிறார்கள்! காங்கிரஸ்காரர்கள் ஆங்கில நாட்டுத் தலைவர்களுக்குக் கறுப்புக் கொடி பிடித்து தங்களுடைய வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்!

அமெரிக்காவை கொலம்பஸ் கண்டு பிடித்தது போல்—கறுப்புக் கொடி காட்டும் முறையை நாங்கள் தான் கண்டு பிடித்ததாக யாரும் நினைக்க வேண்டாம்! காங்கிரஸ்காரர்களிடம் கற்றுக் கொண்ட பாடம் தான் இது!

அவர்கள் செய்த காரியத்தை நாம் மட்டும் ஏன் செய்யக் கூடாது? இதற்காக கண்டனத் தீர்மானம் ஏன்? ஆர்ப்பாட்டம் ஏன்? அடக்கு முறைகள் ஏன்? இது தவறு என்றால் எங்களுடைய கோரிக்கைகளை எப்படித் தான் தெரிவிப்பது? அதற்குச் சரியான, நியாயமான ஒரு வழியைத் தான் சொல்லுங்களேன்! அல்லது இங்குள்ள நிலையை நீங்களாவது எடுத்துச் சொல்லுகிறீர்களா? அதற்குப் தான் பயந்து, பயந்து சாகிறீர்களே! உங்களுடைய திறமைக்கு மரியாதை போய் விடும் என்பதற்காக. உங்களுடைய ஆற்றலுக்கு அவமரியாதை ஏற்பட்டு விடும் என்பதற்காக உள்ள நிலையை மூடிமூடி மறைக்கிறீர்கள்!

இந்த நிலையில் எங்களுக்கு என்ன தான் வழி? எப்படித் தான் எங்கள் குறைகளைச் சொல்லுவது? ஏறத்தாழ மூன்று, நான்கு இலட்ச உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாபெரும் சக்தி படைத்த இயக்கம் கேட்கிறது! நல்ல வழியைக் காட்டுங்கள்—தலை வணங்கி அதை ஏற்றுக் கொள்ளுகிறோம்!

நல்ல வழியைக் காட்டுவதை விட்டு விட்டு, நாகரீகமான முறையைச் சொல்லுவதை விட்டு விட்டு—துப்பாக்கிகளை காட்டுகிறீர்களே! நல்ல இதயம் படைத்த மனிதனிடம் இரும்புக் கருவிகளை காட்டுகிறீர்களே! இது தான் முறையா? இது தான் ஜனநாயகமா? கேவலம் ஒரு பதவிக்காகவா நாட்டைக் காட்டிக் கொடுக்க வேண்டும்? கேவலம் ஒரு பட்டத்திற்காகவா நாட்டுக்குத் துரோகம் செய்ய வேண்டும்? பதவியும் பட்டமும் தான் வேண்டுமென்று சொல்லுங்கள்- இப்போதே உங்களுக்கு உறுதி அளிக்கிறோம்—அது எப்போதும் உங்களுக்கு சாசுவதமாக இருக்கச் செய்கிறோம்!

தேசபக்தி, தேசபக்தி என்கிறீர்களே! வங்காளிகளுக்கு இல்லாத தேசபக்தி, அஸ்ஸாம் மக்களுக்கு இல்லாத தேசபக்தி உங்களுக்கு மட்டும் எங்கிருந்து வந்தது? சுதந்திரத்திற்காக, தமிழ் நாடு செய்த தியாகத்தை விட, வங்கம் செய்த தியாகம் மிக ஏராளம், மிக ஏராளம்! அவர்கள் ஏன "சுதந்திர தினத்தைக் கொண்டாட முடியாது" என்கிறார்கள்? அவர்களும் தேசபக்தர்கள் தான், அவர்களும் காங்கிரஸ்காரர்கள் தான!

அவர்களுக்கு இருக்கிற உணர்ச்சி, இனப்பற்று, மொழிப் பற்று, சொந்த நாட்டுப் பற்று உங்களுக்கு மட்டும் ஏன் ஏற்படவில்லை! உங்களுடைய நெஞ்சம் மனிதர்களுடைய நெஞ்சம் தானே? எல்லோருக்கும் இருப்பது போல்- ரத்தம் நிறைந்த சதையும், எலும்பும் உள்ள நெஞ்சம் தானே? அல்லது இமய மலைச்சாரலில் கிடக்கும் கற்களைக் கொண்டு உங்கள் இதயத்தைக் கட்டிக் கொண்டீர்களா? என்ன விசித்திரம் இது? என்ன விசித்திரம்!

வெள்ளைக்காரனுக்கு எதிராக கலகம் செய்தீர்கள்—அப்போது அவன் கைகளால் அடிபட்டீர்கள், உதை

(18ம் பக்கம் பார்க்க)

குடியரசுத் தலைவர் வருகிறார்!
குடியரசுத் தலைவர் வருகிறார்!

இந்தியைப் புகுத்தி விட்டு இங்கே பவனி வருகிறார்!

காட்டுங்கள் ! காட்டுங்கள் !

அவருக்கு கறுப்புக்கொடி காட்டுங்கள்!

இந்தப் போராட்டத்தில் வெற்றி கிடைக்க வேண்டும் !
இல்லையேல் கழகம் கலைக்கப்பட வேண்டும் !

அன்புள்ள தோழர்களே ! இன்றைய மாநாட்டிற்கு, என்னை தலைமை வகிக்கும்படி என் தம்பிமார்கள் என்னை வந்து தொந்திரவு செய்து கொண்டிருந்த நேரத்தில் நான கொஞ்சம் அச்சப்பட்டேன் ! "எதற்காக என்னை அழைக்கிறார்கள்" என்று கொஞ்சம் பயப்படவும் செய்தேன் ! எனக்கிருந்த அச்சமெல்லாம் இப்போது தீர்ந்துவிட்டது !

என்னை உட்கார வைத்துக் கொண்டு — 'எதிர் பார்த்துக் கொண்டிருங்கள், அண்ணா அதைச் சொல்லுவார் இதைச் சொல்லுவார் அப்படிக் கட்டளையிடுவார், இப்படிக் கட்டளையிடுவார்" என்றெல்லாம் கூறி, என்தம்பிமார்கள் தங்கள் சாமார்த்தியத்தைக் காட்டிக் கொண்டு விட்டார்கள் ! இப்போது தான் புரிந்தது ஏன் என்னை அழைத்தார்கள் என்று !

சோர்வுற்ற நெஞ்சங்களிலே புதிய உற்சாகத்தைக் காண்கிறேன், புதிய தெம்பைப் பார்க்கிறேன்—கவலை தோய்ந்து கிடந்த உங்கள் முகங்களிலே புதிய களிப்பைக் காண்கிறேன், நமது கழக நல்ல எழுச்சி படையைப் பெற்றிருப்பதைக் கண்டு பெருமம் பூரிப்பும் கொள்ளுகிறேன் ! குறிப்பாகவும் சிறப்பாகவும் தாய்மார்களிடையே காணப்படும் உற்சாகத்தைக் கண்டு

எத்தனையோ போராட்டங்களைத் தர முடியும் ! நாம் போராட்டத்திற்கு அலைபவர்களாக இருந்தால் தானே இதைச் செய்யப் போகிறோம் !

"நாம், இந்தியை எதிர்த்து போராட்டம் நடத்த வேண்டும்" என்று குமாரபாளையத்தில் முடிவெடுத்து—அறப்போர் குழுவையும் அமைத்து, அதற்கு தம்பி சம்பத்தை தலைவராக இருக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டோம்!'

காரணமில்லாமல், கவைக்குதவாத காரணங்களைக் காட்டி இந்த முடிவை எடுக்கவில்லை ! எல்லா கதவுகளும் அடைக்கப்பட்ட பின்பு தான் அறப்போர் நடத்துவதென்று தீர்மானித்தோம்!

நான் நிச்சயமாக முடிவெடுத்து விட்டேன்—போராட்டத் திட்டங்களையும் உருவாக்கி விட்டேன் ! "போராட்டம், போராட்டம்" என்று துடித்துக் கொண்டிருக்கின்ற இளைஞர்களுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்—திட்டவட்டமாகச்சொல்ல விரும்புகிறேன்—மூடி மறைக்காமலும் சொலல விரும்புகிறேன்!

இந்த போராட்டம் தான் நம்முடைய இறுதி போராட்டமாக இருக்க வேண்டும்—இந்தியைப் பொறுத்த பட்டில் ! ஒன்று

மக்கள் கடலுக்கு அறிஞர் அண்ணா பிறப்பிக்கும் கட்டளை !

எனக்கு உண்மையிலேயே மெத்த பெருமிதம் ஏற்படுகிறது ! நீங்கள் காட்டுகின்ற உற்சாகம் நீங்கள் தருகின்ற உறுதி அடுத்து நிகழஇருக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு உறு துணையாக இருக்குமென்றே நம்புகிறேன் !

திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய போராட்டங்களைப்பற்றி தம்பி சம்பத் எடுத்துக் கூறியது போல்—நாம் போராட்ட அறிப்புக் கொண்டவர்கள் அல்ல! போராட்டம் நடத்தி தான் வாழ வேண்டும் என்ற நிலையிலும் இல்லை ! எனக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம் அடிக்கடி வந்து "இதையும் செய்தாகிவிட்டது இனி என்ன செய்ய வேண்டும்" என்று கேட்பார்! அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இல்லை !

நமக்கிருக்கிற விடுதலை உணர்ச்சியை அறிந்து மாற்றார்கள் எந்த சூழ் நிலையை நமக்கு உண்டாக்கினாலும்—போடுகின்ற முட்டுக் கட்டைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் ! பாசவலையில் வீழ்ந்து விடாமல், அதை அறுத்துக் கொள்ள வேண்டும் !

நான் இப்போதும் கூட தயங்கி, தயங்கி தான் போராட்டத்திற்கு அனுமதி கொடுத்தேன் போராட்டத்திற்கு அழைத்தால் யாரும் வர மாட்டார்கள் என்பதற்காக அல்ல! போராட்டம் கிடைக்கவில்லை என்பதற்காகவும் அல்ல! "இருங்கள், இருங்கள் இதோ தருகிறேன் போராட்டங்களை" என்று சொல்லுபவனுமல்ல!

நீங்கள் ரசிக்கின்ற அளவுக்கு—நீங்கள் துடிக்கின்ற அளவுக்கு போராட்டங்களைத் தர வேண்டுமென்றால் எத்தனையோ போராட்டங்களைத் தர முடியும் ! ஒரு அரைமணி நேரம் மேல் நாட்டு வரலாற்றுச் சுவடிகளைப் படித்தால் வெற்றி கிடைக்க வேண்டும், இல்லாவிட்டால் கழகம் கலைக்கப்பட வேண்டும்! வெற்றி கிட்டவில்லை என்றால் நமக்கு கழகமும் தேவையில்லை ! பத்தோடு அது ஒன்று, பத்தோடு இது ஒன்று என்று காட்டுவதற்காக அல்ல இந்தபோராட்டம்!

என் தம்பிமார்களின் தியாக உள்ளங்களை நான் சந்தேகிக்கவில்லை! என்னிடமுள்ள தம்பிமார்கள் தியாகத்தையே காணாதவர்களும் அல்ல! போராட்டத்தில் ஒரு முடிவைக் காண

அடிபட அழைக்கிறேன்! உதைபட அழைக்கிறேன்!
உயிர்விட அழைக்கிறேன்!

கோழைகளைக் கூப்பிடவில்லை-என் தம்பிகளைத்தான் அழைக்கிறேன்!

தம்பி வா! தமிழைக் காக்க வா!

வேண்டும்! போராட்டத்தின் மூலம் ஒரு நல்ல பயனை உண்டாக்கித் தர வேண்டும், ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தி விட வேண்டும்! நான், மக்களின் வாழ்வை பாழ்படுத்த விரும்பவில்லை, அவர்களின் வாழ்க்கை வீணாக பட்டு விடக் கூடாது என்பது தான் என்னுடைய ஆசையாகும்! தொடர்ந்து மூன்று நாள் இதைப் பற்றி விவாதம் செய்த பின்பு தான் குமாரபாளையத்தில் முடிவெடுத்தோம்!

காங்கிரஸ்காரர்கள் மதுரையில் கூடி-"இந்த போராட்டத்திற்கு ஆதரவு தரக் கூடாது" என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்! அரசியல் ஈனத்தனத்தைக் கையாளாமல் நாகரீகத்தோடு நீங்கள் மக்கள் கருத்தை அறிந்திருக்க முன் வந்திருக்க வேண்டும்! நீங்கள் அரசியலிலே ஆண் மகனாக இருந்தால் இதைத் தான் செய்திருக்க வேண்டும்! மைதானத்திற்கு வந்து மக்களுடைய எண்ணங்களை அறிந்திருக்க வேண்டும்! தைரியமிருந்தால் அதைச் செய்து பாருங்கள்!

என் தம்பிமார்களிலே யார் பலகீனமானவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களோ—அப்படிப்பட்டவர்கள் இங்கு யாருமில்லை—அவர்களிடம் வாது விவாதிக்கட்டும்! இரண்டு பேருடைய விவாதத்திற்கு பிறகும் பரீட்சை நடத்துவோம்! மக்கள் என்ன தீர்ப்பளிக்கிறார்களோ அதை ஏற்றுக் கொள்வோம்-உங்கள் நெஞ்சிலே நேர்மை இருக்குமானால் வாருங்கள் வாது மக்கள் தீர்ப்பைப் பெறுங்கள்! (கரகோஷம்)

அமைச்சர்களில் யார் அசகாய சூரரோ, யார் துடிப்புள்ளவரோ அவரே வரட்டும், எங்களில் யாரையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்!

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனோடு பேசட்டும்-இராமச்சந்திரன் மக்களுடைய உள்ளங்களை கவர்ந்து விட்டவர் என்று நினைத்தால்-ராஜேந்திரனோடு பேசட்டும்-அவர் ஆட்களை மயக்கி விடுவார் என்று கருதினால்-கருணாநிதியோடு வாது பேசட்டும்-"மக்களிடம் அவன் எதைப் பேசி விடுவானோ எதைத் தூண்டி விடுவானோ" என்று நினைத்தால் அவரைவிட்டு விடுங்கள்-உங்களுக்கு யார் தகுதி என்பதை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்! உங்களுக்கு என் தம்பிமார்களில் யார் வேண்டும்? மக்களிடம் தேர்தல் நடத்தி கருத்தறிய வருகிறீர்களா? (கரகோஷம்)

நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் எனக்கு சவால் விட்டிருக்கிறாராம்! 'பிரிவினை கொள்கையை வைத்து காஞ்சீபுரம் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கத் தயாரா" என்று கனம் சுப்பிரமணியம் எனக்கு சவால் விட்டாராம்!

அடுத்தத் தேர்தலில் "நான் நிற்பதா, வேண்டாமா' என்று கொஞ்சம் தயக்கப்பட்டுக் கொண்டிருந்தேன்-என்னை அவர் அழைக்கிறார்—(சிரிப்பு) அடுத்தத் தேர்தல் வரட்டும்-நான் நிற்கிறேன்-கனம் சுப்பிரமணியம் நிற்பாரா? (கரகோஷம்)

"நான் நிற்கிறேன், அவர் வருவாரா" என்று கனம் சுப்பிரமணியம் சொல்லி இருந்தால், அறிவு மட்டுமல்ல அவருடைய வளத்தையும் பாராட்டி இருப்பேன்!

மாபெரும் தலைவர்கள் வாடகை மண்டபத்தில் கூடி, இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் தி. மு. கவை அழித்து விட முடியாது!

மதுரை காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி மதுரை முத்து பேசினார்கள் நம்முடைய போராட்டம் அறத்தின் பால் இருக்க வேண்டும், அமைதியாக இருக்க வேண்டும்! பலாத்காரத்திற்கு சிறிதும் இடம் தரக் கூடாது!

சிறு பிள்ளைகள், சைக்கிள் வண்டியில் அதிகம் ஓசைக் கேட்க வேண்டும் என்பதற்காக-பனை ஓலைகளை சைக்கிள் வண்டியின் சக்கரத்தில் கட்டி விட்டு ஓட்டுவார்கள்! அந்த சலசலப்பு சத்தத்தைக் கேட்டு அவர்கள் மகிழ்ச்சி யடைவார்கள்! அந்த ஓசை நமக்கு வேண்டாம்!

என் தாய் மொழி என்றிருயா? தடியடிபட்டாலும் "என் தாய் மொழி வாழ்க, என் தாய் மொழி வாழ்க" என்று தான் சொல்ல வேண்டும்!

எதிர்த்து அடித்துப் பழக்கப் பட்டவர்களல்ல நாம்! சட்டத்தின் மதிப்புக் கெடாமல், சட்டத்தின் பால் நின்று நாம் போராட வேண்டும்!

போராட்ட வீரர்கள் மீது துரைத்தனம் பூ போடுவார்கள் என்று நினைக்கக் கூடாது!

உங்கள் கரங்கள் ஒடிக்கப்படலாம், உங்கள் கால்கள் துண்டிக்கப்படலாம், உங்கள் உயிரையே அவர்கள் வாங்கிக் கொள்ளலாம்!

இந்த கொடிய அடக்கு முறைகளை தாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தவர்கள், மன உறுதி படைத்தவர்கள் மட்டுமே வர வேண்டும்! மற்றவர்கள் தேவையில்லை' இதற்கு யார் யார் அஞ்சுகிறார்களோ, இதற்கு யார் யார் பயப்படுகிறார்களோ அவர்கள் இந்த தேவையில்லை! வெளியேறி விடலாம்,

பின்னால் என்னை சபிக்காதீர்கள், பின்னால் என்னை தூற்றாதீர்கள்! 'இவ்வளவு பெரிய அடக்கு முறைகளுக்கு எங்களை ஆளாக்கி விட்டீர்களே" என்று என் மீது வீண் பழி சுமத்தாதீர்கள்.

"கை, கால்கள் ஒடிந்தால் அஞ்சமாட்டோம்" என்று சொன்னால் மட்டும் போதாது-நம் மனதையும், உள்ளத்தையும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்!

இங்கு பேசிய புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனும், எஸ். எஸ். இராஜேந்திரனும், கே. ஆர். இராமசாமியும் கட்டளையிடும் படி கேட்டார்கள்!

நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் வெளியில் தான் இருக்க வேண்டும்—அடிபட்டால் டாக்டர் மருந்து கொடுக்க வேண்டும். வழக்காட வக்கீல்கள் வேண்டும்!

"எங்களுக்கு என்ன சொல்லுகிறீர்கள், எங்களுக்கு என்ன சொல்லுகிறீர்கள்" என்று கலைஞர்கள் கேட்டார்கள்! கலைஞர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம், அவர்களுக்கு விதிவிலக்கு தரத்தான் வேண்டும்.

கலையுலகத்தில் ஒரு பயங்கர சதி உருவாகிக் கொண்டு வருகிறது இவர்களை அழித்தொழிக்க ஒரு பெரும் முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நம்முடைய கலைஞர்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்களானால்—ஒரு பதினைந்து ஆண்டு காலத்திற்கு கலையுலகம் நம் கரத்தை விட்டே போய் விடும்.

நம்முடைய கலைஞர்கள் போராட்டத்திற்கு அஞ்சுபவர்களல்ல - சிறை செல்ல பயப்படுபவர்களும் அல்ல. தடியடி படுவதற்கு என்றுமே அவர்கள் தயங்க மாட்டார்கள்.

எம். ஜி. இராமச்சந்திரனை போலீஸ்காரர்கள் அடிக்கவும் முன் வர மாட்டார்கள். ஒரு சமயம் எம். ஜி. இராமச்சந்திரனை பார்க்க வேண்டும் என்பதற்காக போலீஸ்காரர்கள் அவரைச் சூழ்ந்து கொள்ளலாம்!

நாம் போராட்டம் நடத்துவது அப்போதைக்குப் போது கிடைக்கும் சிறு சிறு பலன்களுக்காக அல்ல-நீண்ட காலத்திற்கு வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகத் தான். இதை நம்முடைய நண்பர்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். நிரந்தர பலன், நீடித்த பலன் கிடைக்க வேண்டும்.

இந்த நேரத்தில் ஒரு புதிய சம்பவம் ஒன்று நடைபெற இருக்கிறது!

இந்தியத் துணைக்கண்டத்தின் குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் தமிழகத்திற்கு வர இருக்கிறார் அவரைப் போல் ஒரு சாந்த சீலரை, அவரைப் போல் ஒரு கண்ணியமிக்கவரை, அவரைப் போல் ஒரு காருண்யம் உள்ளவரை, அவரைப் போல் ஒரு அப்பழுக்

சிறைக்கஞ்சோம், சித்திரவதைக்கும் பயப்படோம்!

அடலேறு நாங்கள் — ஆயுள் தண்டனையா, அதையும் ஏற்போம்!

கற்ற உள்ளம் படைத்தவரை, அவரைப் போல் சிறிதும் சுயநலமில்லாதவரை நாம் பார்க்கவே முடியாது!

அப்படிப்பட்ட அப்பழுக்கற்ற சுயநலம் பேணாத சிலர், மொழி விஷயத்தில் பிடிவாதமாக இருக்கிறார்!

இந்தி மீது அப்பழுக்கற்ற நம்பிக்கையை வைத்திருப்பவர்! இந்தி தான் பொது மொழியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அசையாத நம்பிக்கை வைத்திருப்பவர்!

மத சம்பந்தப்பட்ட விழாவானாலும், இந்தி விழாவானாலும்—நேருவை அழைப்பதை விட பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களைத் தான் அங்குள்ளவர்கள் அழைக்கிறார்கள்!

குடியரசுத் தலைவர் தன் தாய் மொழிக்கு சிறப்பான புகழைத் தேடித் தர வேண்டும் என்று எண்ணுகிறார்! இந்தியை பொது மொழியாக்கி விட வேண்டும் என்று துடியாய் துடிக்கிறார்! மற்ற மொழிகள் மீது கொஞ்சமும் கவலை செலுத்தாமல், தன் தாய்மொழியை எப்படியும் பொதுமொழியாக்கி விட வேண்டும் என்று கருதுகிறார்.

இவ்வளவு பெரிய மனிதர் பதவியிலிருந்து கொண்டே எல்லாவற்றையும் மறந்து—பேசினால் எல்லோரும் இந்தி மொழியில் தான் பேச வேண்டும் என்று கூறி வருகிறார் இதை செயல் படுத்த புதிய கட்டளையும் பிறப்பித்திருக்கிறார்.

"இந்தி பேசாத மக்கள், எத்தனை காலத்திற்கு ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ அத்தனை காலத்திற்கு ஆங்கிலம் நீடித்திருக்கும் என்று நேரு பெருமகனார் வாக்குறுதி அளித்தார். "ஆனால், நான் இந்தியிலேயே பேசக் கடமைப்பட்டவன்" என்றும் கூறினார். உள்ளபடியே பண்போடு, சற்று துணிச்சலோடு தான் கூறினார்.

தம்பி சம்பத்தும், தர்பலிங்கமும்—இந்த நேரத்தில் திசை மாறி பெரியாரை நினைத்துக் கொள்ளுவதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

நமது பெரியார் அவர்கள் நாம், சட்டசபைக்கு போக வேண்டும் என்று சொன்ன நேரத்தில்—"சட்ட சபைக்குச் சென்றால்-எதைச் சாதிக்க முடியும்-அங்கு போய் எதையும் சாதிக்க முடியாது" என்று நம்மைப் பார்த்துக் கூறினார்! சட்ட சபையின் மூலம் சாதிக்க முடியும் என்று எண்ணுவது பைத்தியக்காரத்தனம் என்றும் சொன்னார்.

நான் பெரியார் அவர்களுக்குச் சொல்லுவேன்-உங்கள் வீட்டுப் பிள்ளை-பந்தவுக்கு எதிரே, மொழி வெறி பிடித்த தாண்டனுக்கு எதிரே-திருவண்ணாமலை தாபலிங்கத்தையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு-நேருவைப் பார்த்து, பாதுவைப் பார்த்து, தாண்டனை பார்த்து – விளக்கம் கேட்கின்ற தைரியம்-பாராளுமன்றத்திற்குப், சட்ட சபைக்கும் போனதால் தான் வந்ததே தவிர வெளியிலிருந்தால் வந்திருக்காது.

தம்பி சம்பத்து அந்த செல்வாக்குப் படைத்தவர்களிடம் பேசும் அந்த வீரம் நிறைந்த காட்சியைப் பாருங்கள் இதையெல்லாம் பார்க்கும் போது—வைதிக பாஷையில் சொல்ல வேண்டுமானால்-பெரியார் அவர்களே! இந்தபிள்ளையை அடைய எத்தனை மாதவம் செய்தீர்களோ எத்தனை மாதவம் செய்தீர்களோ என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது.

நம்முடைய சம்பத் பாராளுமன்றத்தில் பேசினால் இங்குள்ளவர்களுக்கு அந்த பேச்சின் அருமை தெரியாது. பந்து நடுங்குகிறார்! தாண்டன் அஞ்சுகிறார்! நான் அந்தக் காட்சியை கண்ணால் கண்டேன் -கீழே இருந்தல்ல—மிக உயரத்திலிருந்து,

மிருகக் காட்சி சாலையிலிருக்கும் கிழ சிங்கத்தைப் போல், தலையை ஆட்டி, ஆட்டிக் கொண்டு நமது சம்பத்தை முறைத்து முறைத்து பார்த்துக் கொண்டிருக்கிறார்—அந்த வல்லப பந்த

நமது சம்பத், பாராளுமன்றத்தில உட்கார்ந்திருக்கும் அந்த கிழ சிங்கத்தைப் பார்த்து "இந்தியா ஒரு நாடா" என்று கேட்டார். இது வரையில் யார் கேட்டார்கள்.

"இந்தியா ஒரு நாடா"? என்று கேட்டவுடன், பந்த் படபடத்தார். நேரு திகைத்தே போனார்.

இப்படி அவர்களை நடுங்க வைக்கும் தைரியம் இதுவரை யாருக்கு வந்தது?

இந்த பெருமை தரும் செய்தியை பெரியாருக்கு பெரிய இடத்திலே இருக்கும் நண்பர்கள், அவர் கோபமாக இல்லாமல் சந்தோஷமாக இருக்கிற நேரத்தில் சொல்லும்படி வேண்டுகிறேன்!

பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியை குடியரசுத் தலைவர் மறந்து சட்டம் பிறப்பிப்பதா? ஏன் மறந்தார்? எப்படி மறந்தார்? தென்னகத்து மக்களை திருப்தி செய்வதற்காக தான் நேரு பெருமகனார் இப்படி வாக்குறுதி கொடுத்தார் போலும்!

குடியரசுத் தலைவரின் சட்டத்தை ஏற்பதா? ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட பார்லிமெண்டில் பேசிய பிரதமரின் வாக்குறுதியை ஏற்பதா? குடியரசுத் தலைவர் தலைவர் இதை மறந்திருந்தால் நேரு நினைவுறுத்திச் சொல்லி இருக்க வேண்டுமே!

குடியரசுத் தலைவருக்கு இப்படி மறப்புக் கூறி இருந்தால்—பாரதப் பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் கருத்து வேற்றுமை இருப்பது தெரிந்துவிடும்!

ஆங்கில தினசரி ஒன்று குடியரசுத் தலைவரின் அறிக்கையில் குழப்பம் இருப்பதாகக் கூறி இருக்கிறது! மிகச் சாமான்யமாக இருக்கும் எங்களுக்கு வரலாம், எங்களுடைய பேச்சில் வரலாம். காமராஜருக்கு வரலாம் — அவர் சின்னஞ் சிறிய நாட்டின் முதலமைச்சர். குடியரசுத் தலைவருக்கு எப்படி குழப்பம் வரும்?

சமீபத்தில் சோவியத் ரஷ்யாவுக்குச் சென்று குருசேவ் கரங்களைக் குலுக்கி - அங்கு சமாதானத்தைப்பற்றிய அறிவுரை வழங்கி விட்டு வந்தவர்.

அண்மையில் அமெரிக்காவிற்கு சென்று, விஞ்ஞான புதுமைகளைப் பற்றி விளக்கம் கூற இருப்பவர்; இவருக்கு வரலாமா இந்தக் குழப்பம்.

"இருட்டு வேளை யாரோ என்று நினைத்து பிடித்து விட்டேன். பொறுத்துக் கொள் என்றானாம் ஒருவன். அதைப் போல அந்த ஆங்கில ஏடு எழுதுகிறது.

செய்கிற குழப்பம் பொறுத்துக்கொள்ளக் கூடியதா? ஆட்சியிலிருப்போர்களின் குழப்பத்தால் எத்தனை, எத்தனை விபரீதங்கள் ஏற்படும்? இவர்களுக்கு ஏற்பட்ட இந்த குழப்பம் தான் குமார பாளையத்தில் முடிந்தது,

ஒரு பக்கத்திலே நாகர்கள் குழப்பம். சீனர்கள் குழப்பம்-பாகிஸ்தானின் குழப்பம்! அந்தக் குழப்பங்களைப் பற்றி பெருங் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் குடியரசுத் தலைவர் நாம் விடுத்த மிக முக்கியமான வேண்டுகோளுக்கு மதிப்பளித்து பதில் தரவில்லை. அதைப் பற்றி ஒரு துளியும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

15 எம். எல். ஏக்களை கொண்ட ஒரு இயக்கம், 2 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு இயக்கம், 45 கௌன்சிலர்களையும், ஒரு மேயரையும் வைத்துக் கொண்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு இயக்கம் குடியரசுத் தலைவருக்கு விடுத்திருக்கும் மிக முக்கியமான வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கவில்லை என்றால் என்ன பொருள்? குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய அந்த வேண்டுகோளை அவருடைய செயலாளரின் கையொப்பமிட்டு அதைப்பெற்றுக் கொண்டும் இருக்கிறார்!

எங்களுக்கு மதிப்பளித்தால் செங்கோட்டையில் பறக்கின்ற கொடி தானாக கீழே இறங்கியா விடும்?

யார் யாருக்கோ மதிப்பளிக்கின்றவர்கள் நமக்கு மட்டும் மதிப்பளிக்காத காரணம் என்ன? நாமும் ரத்தத்தைக் கொட்டிக் காட்டினால் தான் மதிப்பளிப்பார்கள் போலும்.

நாமும் ரத்தத்தை சிந்தினால் அவர்களும் தானாகவே வந்து மதிப்பளிப்பார்கள்.

நாம் கொட்டிக்காட்டிய ரத்த காட்சி, நாம் அறுத்தெறியும் நரம்

வீதியெல்லாம் பிணங்கள் விழட்டும்!

கறுப்புக் கொடிகள், சிகப்பாக மாறட்டும்!

புகள் அவர்களைப் பணிய வைத்தே தீரும்!

நான் உங்களுக்கு எம். பி. பதவியைத் தருகிறேன், எம். எல். ஏ, பதவிகளை வாங்கித் தருகிறேன்" என்றுகூறிடும் தலைவர்களைப் போல் உங்களுக்கு ஆசை வார்த்தைச் சொல்லி அழைக்கவில்லை. வருத்தப்பட வேண்டாம்-உங்களை அடிபட அழைக்கிறேன் உதைபட அழைக்கிறேன்-உயிர் விட சித்தமாக உள்ளவர்களை அழைக்கிறேன்.

நான் கல்நெஞ்சக்காரன் தான்-சந்தேகமில்லை. அப்படிச் செய்யா விட்டால் உலகம் நம்மைத் தூற்றும்.

அடிபட்டு உங்கள் உடலிலிருந்து பீறிட்டு கிளம்புகின்ற குருதியால் இந்த மண் மகிமை அடையட்டும். உங்களுடைய குருதியால் இந்த நாடு புனிதமடைய வேண்டும்!

இந்த மாபெரும் வெள்ளத்தைக் கண்டு மலைத்தேன், இந்த மாபெரும் உணர்ச்சியைக் கண்டு மருண்டேன். எத்தனை தலைகள் உருளுமோ, எத்தனைத் தாய்மார்கள் அடிபட்டு, உதைபட்டுகீழே விழுவார்களோ.

தாய்மார்களைக் கண்டால் எனக்கு மிக்க வேதனையாக இருக்கிறது!

நம்முடைய நண்பர் சாரதி பேசுகையில்... "அண்ணா ஆணையிடுங்கள் எதை வேண்டுமானாலும் செய்கிறோம் — அசாமைப் போல் வேண்டுமானாலும் ஆக்கிக் காட்டுகிறோம்" என்று கூறினார் எனக்கிருக்கிற பயமே அது தானே? எனக்கிருக்கும் அச்சமெல்லாம் எங்கே அசாமாகி விடுமோ, அதை எப்படித் தடுப்பதோ என்பது தானே? மறந்தும் அந்த நிலை இங்கு வரக் கூடாது அசாமை உணடாக்குவது நமக்கு பெரிய காரியமல்ல, வெகு சுலபத்தில் அதை உண்டாககிவிட முடியும்.

அசாமில் நடை பெற்றது ஒரு வாரத்துவாணவேடிக்கை, அதை கண்டு ரசிக்கலாம்! அதனால் என்ன பயன்! நாம் அப்படிப் பட்டவர்கள் அல்ல!

இதைத் தான் எம். ஜி இராமச்சந்திரனும்கொஞ்சம ஜாடையாகக் குறிப்பிட்டார். சௌகார் பேட்டையிலுள்ள நண்பர்களும் இந்தி மொழி பற்றி வேண்டுகோள் விட வேண்டும், குடியரசுத் தலைவருக்கு தங்கள் எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார். அப்படிச் செய்யவில்லையானால் அதற்குப் பின்னாலே என்ன நேரும் என்பதை அவர் குறிப்பிடவில்லை, ஆனால் அவர் கூறியதில் என்ன அர்த்தம் இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்.

நாம் அந்த முறையில் போராட்டம் நடத்துபவர்கள் அல்ல! "கொள்கையை ஸ்தாபிக்க முடியாதவர்கள், பலாத்காரத்தை கடைப்பிடிப்பவர்கள்" என்று நம்மை உலகம தூற்றும் அந்த அவச் சொல்லுக்கு நாம் ஆளாகக் கூடாது. எவ்வளவு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டாலும் நாம் கொள்கையிலிருந்து ஒரு துளியும் பிறழக் கூடாது. நாம் அறவழியில் நின்று தான் போராட வேண்டும்!

நாம் நடத்த இருக்கின்ற போராட்ட முறை எப்படி இருக்கும் என்று நீங்களெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கக் கூடும்.

நாம் நடத்த இருக்கின்ற போராட்டம் - பள்ளிகூடத்து மறியலாக இருக்கலாம், மத்திய சர்க்கார் அலுவலகங்களில் நடத்தப் படும் மறியலாக இருக்கலாம், தபால் தந்தி நிலையங்களில் செய்யப்படும் மறியலாக இருக்கலாம். மந்திரிகள் வீட்டு முன்பு செய்யப்படும் மறியலாகவும் இருக்கலாம். ஆனால் இப்போது யோசிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. (கைதட்டல், ஆரவாரம்)

இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கம்யூனிஸ்ட்டு கட்சியும் இந்த இந்தி போராட்டத்தை ஓரளவு ஆதரிக்க முன் வந்திருக்கிறது—அந்த கட்சியின் செயலாளரும் இது பற்றி கடிதம் எழுதியுள்ளார்! (கையொலி வானைப் பிளந்தது—ஆரவார ஓசை முகிற் கூட்டங்களை கிழித்தது)

நண்பர்களே!

ஆரவாரம் செய்து கை தட்டுகிறீர்கள். "ஓரளவு" என்று சொன்னதை எல்லோரும் கவனப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆச்சாரியாரும், "இந்த போராட்டத்திற்கு எல்லோரும் ஆதரவளிக்க வேண்டும்" என்று தனது கல்கி ஏட்டில் எழுதி இருக்கிறார். தன்னையும். தனது கட்சியையும் நீக்கியே இதைச் சொல்லி இருக்கிறார். (மக்கள் கடல் சிரிப்பொலியில் மூழ்கியது)

குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் 6-ம் தேதி முதல் 17-ம் தேதி வரையில் தமிழகத்தில் பவனி வர இருக்கிறார். சென்னை, தூத்துக்குடி, சேலம், கோவை, காட்பாடி. வேலூர், குற்றாலம், இப்படி பல இடங்களில் அவர் பவனி வருகிறார்.

குடியரசுத் தலைவருக்கு, நேரு பண்டிதரைப் போல் இப்படி திடீர் ஆசை ஏற்படக் காரணமென்ன? இந்த நீண்ட சுற்றுப் பிரயாணம் அவர் உடலுக்கு ஏற்றதல்ல, உள்ளத்திற்கும் நல்லதல்ல,

தமிழகத்தில் ஆகஸ்டு 6-ம் தேதி முதல் 17-ம் தேதி வரையில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார் என்றால் அதன் பொருள் என்ன? "இதன் பொருள் தெரியவில்லையா? நாங்கள் வருந்தி. வருந்தி அழைத்தோம் அவரும் வந்தார். நீண்ட காலமாக தமிழகத்திற்கு வரும்படி அழைத்தோம்-இப்போது தான் சந்தாப்பம் கிடைத்தது" என்று சொல்லக் கூடும்.

பாபு ராஜேந்திர பிரசாத்தை நாம் இங்கு பவனி வர அனுமதித்தால் உலகம் என்ன சொல்லும்! அமெரிக்காவில் இருப்பவர்கள், பர்மாவில் இருப்பவர்களும்—லண்டனில் மாநாடு கூட்டி பேசிக் கொண்டிருக்கும் நாகர் நாட்டுத் தலைவனும் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்.

பாபு ராஜேந்திர பிராசாத் வருகையை நாம் அனுமதித்தால், தமிழ் மக்கள் அவருடைய ஆதிகக வெறிக்கு அடி பணிந்து விட்டதாக உலகம் தூற்றும் இந்தி மொழியை திணித்துவிட்டு வருகிற பாபு ராஜேநதிர பிரசாத்தை இங்கே பவனி வருவதற்கு வாய்ப்பைத் தந்தால் நம்மை துச்சமென கருதமாட்டார்களா?

நாம், அப்படி அவரை வர அனுமதித்தால் நாம் மனிதர்களாக மாட்டோம்.

ஓரிரு திங்களுக்கு முன்பு அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஐசனோவர் ஜப்பான் நாட்டிற்கு வர இருந்தபோது — அவரது வருகையை ஜப்பான் நாட்டின் எதிர்கட்சித் தலைவர்கள் எதிர்த்தார்கள். வரக கூடாது, வர விட மாட்டோம்" என்று சொன்னார்கள்.

"எதிர் கட்சி தானே, இதை எதிர்ப்பதற்கு என்ன உரிமை இருககிறது" என்றார் ஜப்பான் நாட்டு அமைச்சர் கிஷி. ஆம் இப்போது எதிர்கட்சி—அடுத்து அது தான் ஆளும் கட்சி" என்று பதில் வந்தது வாலிபர் பட்டாளம் திரண்டது.

அமெரிக்க ஜனாதிபதியை ஜப்பான் நாட்டிறகுள் அனுமதியோம் என்று முழக்கமிட்டனர். அவர் வரவில்லை என்றார். இதனால் இரண்டு பேர்களுடைய மதிப்பும் கெட்டு விட்டதாகத் தெரியவில்லை.

ஜப்பான் நாட்டு பிரதமர் கிஷி அமெரிக்கநாட்டு தலைவரை வர வேண்டாம் என்றார்-"இந்த நேரத்தில் போகக் கூடாது" என்று கருதி ஐசனோவரும் வரவில்லை என்று சொன்னார்.

இளநீர் குடித்தால் நல்லது தான்-அதை மதுவாக்கித் தந்து விட்டால் போதை தான் தலைக்கேறும்,

விருந்தோம்பலில் புகழ்பெற்ற தமிழகத்தை வேறு பாதையில் திருப்புகிறார்கள். தமிழுக்கு துரோகம் செய்து விட்டு குடியரசு தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் இங்கு பவனி வருகிறார். அவரைவரவேற்கலாமா? வேண்டாமா என்பதை நீங்களே கூறி விடுங்கள். (வரவேற்க மாட்டோம், வேண்டாம்-மக்கள் இப்படி விண்ணதிர முழக்கம் செய்தனர்)

உங்கள் உற்சாகத்தை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். குடியரசுத் தலைவருக்கு எதிராக நாம் எதிர்ப்புணர்ச்சியைத் தெரிவித்தால் ஆட்சியாளர்கள் அடக்கு முறைகளை அவிழ்த்து விடுவார்கள். குடியரசுத் தலைவர் வருகின்ற நேரத்தில் ஒன்று, இரண்டு. மூன்று என்று வரிசையாக பிணங்கள் விழ வேண்டும். பிணமலைகளைப் பார்த்தால்தான் நமக்கு மதிப்பளிப்பார்கள் நம் கொள்கையை மதிப்பார்கள்.

அன்பழகன் உணர்ச்சியோடு சொன்னார் "அண்ணா நீங்கள் சாகக கூடாது" என்று ஒருவொருக்கொருவர் சொல்லிக் கொள்ளும் ஆறுதல் வார்த்தைகள் தான் இது. என் மீதுள்ள பாசததால், பற்றால் இப்படி கூறுகிறார். போராட்டத்தில் எதைப் பற்றியும் கவலைப்படக் கூடாது. எதையும் தாங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு தயார் தானா?

(தயார், தயார், மக்கள் வெள்ளம் உணர்ச்சியோடு கூறிற்று)

(15-ம் பக்கம் பார்க்க)

வெற்றி! வெற்றி! மாபெரும் வெற்றி!

இந்தி கட்டாயமில்லை, எப்போதும் கட்டாயமில்லை!

பாபுவின் உறுதி மொழி, நேருவின் கடிதம், பந்துவின் விளக்கம், சுப்பிரமணியத்தின் வேண்டுகோள்

அத்தனையும் நம் இலட்சியத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்!

கறுப்புக் கொடியை கை விடுவோம்! சண்ணியத்தைக் காப்போம்!

வெற்றி வீரன் சம்பத்தைப் பாராட்டுவோம்!

அவருக்கு புகழ்மாலை அணிவிப்போம்

குமாரபாளையத்தில் கூடிமுடிவெடுத்த அறப்போருக்கு வெற்றி கிடைத்து விட்டது, மாபெரும் வெற்றி கிடைத்து விட்டது!

பணியாதவர்களெல்லாம், பணிய முடியாது என்று கொக்கரித்தவர்களெல்லாம் மக்கள் சக்திக்கு பணிந்து சரணாகதி அடைந்து விட்டார்கள்!

இந்தியைத் திணிக்க மாட்டோம். இந்தி எந்த காலத்திலும் வரவே வராது—எங்கள் பாபுவுக்கு கொடி காட்டாதீர்கள் என்று புலம்பி இருக்கிறார்கள்!

சென்ற மூன்று நான்கு தினங்களாக தமிழகத்து அரசியலை கூர்ந்து கவனித்தவர்களுக்கு நன்கு புரியும் என்றே நம்புகிறோம்! பத்திரிகைகளை புரட்டினாலும், ரேடியோக்களைத் திருப்பினாலும் "வேண்டுகோள், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வேண்டுகோள்—இந்தி கட்டாயமில்லை, இந்தி கட்டாயமில்லை" என்ற செய்திகளைத் தான் படிக்க முடிகிறது. கேட்க முடிகிறது! ஏன் இந்த நிலை ஏற்பட்டது? எப்படி இந்த நிலை வந்தது?

குமாரபாளையத்தில் கூடி இந்தியை எதிர்த்து அறப்போர தொடுக்கப் போகிறோம் என்று அறிவித்த போது அமைச்சர்களெல்லாம், காந்தி சீடர்களெல்லாம் கிண்டல் செய்தார்கள், நக்கல் செய்தார்கள்! "போராட்டமா? நடக்குமா? நடக்க விடுவோமா? அப்படியே நடந்தாலும் அந்தப் போராட்டம் வெற்றி பெறுமா" என்று கனம் காமராஜர் முதல், கனம் சுப்பிரமணிய முதல் சாதாரண காங்கிரஸ் தொண்டர்கள் வரை கொக்கரித்தார்கள்! இன்று நிலை என்ன?

சென்னை கோடம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டி, இலட்சக் கணக்கான படை வீரர்களை அழைத்து களம் நோக்கிச் செல்ல அண்ணா கட்டளையிட்டவுடன் - தமிழகம் பவனி வரும் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடிகள் பிடிக்க வேணடும் என்று ஆணையிடடவுடன் - மாவீரர்கள் என்று தங்களை அறிமுகம் செய்துகொண்டு வீதிகளிலே திரிந்த சீமான்களெல்லாம் மருண்டார்கள், மிரணடார்கள், பயந்தார்கள்—"ஐய்யய்யோ என்ன நடககுமோ" என்று பெரும் கவலைப் பட்டார்கள்!

நம்மை துச்சமென மதித்து வந்த, நம்மை தூசென மதித்து வந்த நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அலறினார்- அவசரம், அவசரமாக பத்திரிகை நண்பர்களை அழைத்து மாநாடு கூட்டினார்—"வேண்டாம், வேண்டாம்—பாபுவுக்கு, எங்கள் குடியரசுத் தலைவருக்கு கறுப்புக் கொடி பிடிக்க வேண்டாம்" என்று நமக்கு வேண்டுகோள் விடுத்தார்! "தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று தலை வணங்கி வேண்டிக் கொண்டார்!

"எல்லா கட்சித் தலைவர்களையும் அழைக்கிறேன் – கலந்து பேசுவோம், நல்ல முடிவைக் காணுவோம்! எல்லோரும் சேர்ந்து இந்திய சர்க்காரோடு போராடி நம் உரிமையைப் பெறுவோம்!" என்று கனிவுரை வழங்கினார்!

நமது முதலமைச்சர் கனம் காமராஜரும் காட்டாதீர்கள், கறுப்புக் கொடிகளைக் காட்டாதீர்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்!

இதுவரை யாருக்கும் பணியாத கோவிந்த வல்லப பந்து டெல்லி மக்கள் சபையிலே விளக்கம் தந்தார்! 'இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைக் கட்டாயப்படுத்த மாட்டோம்! இந்தியை திணிக்க மாட்டோம்' என்று எடுத்துரைத்தார்! 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்க மசோதா வரும் என்று மிகத் தெளிவாகச் சொன்னார்!

இந்தியத் துணைக் கண்டத்தப் பிரதமரும் "வாக்குறுதியை மீற மாட்டோம்" என்று நமது அறப்போர் தலைவர் ஈ. வி. கே. சம்பத்துக்குகடிதம் எழுதி இருக்கிறார்!

எல்லாவற்றையும் விட தமிழகம் வர இருக்கும் குடியரசுத தலைவரே-"இந்தி எந்த காலத்திலும் எவர் மீதும் திணிக்கப் பட மாட்டாது" என்று கூறி இருக்கிறார்!

இத்தனை விளக்கமும், இத்தனை தெளிவுரையும் நமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்!

"செல்வாக்கற்ற கட்சி, செல்லரித்துப் போன கட்சி, யாரும் சீந்துவார் அற்ற கட்சி" என்ற எண்ணத்தைக் கை விட்டு—அமைச்சர்கள் ஆடாசடபடடு அச்சப்பட்டு திகிலும், திகைப்பும் கொண்டு வேண்டுகோள் விடுவிக்கும் நிலைபிறந்திருக்கிறது என்றால் அதுவே ஒரு பெரும் வெற்றியல்லவா?

இத்தனை விளக்கங்களுக்குப் பிறகும் நாம் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக கொடி காட்டுவது நியாமாகாது! அதை நிறுத்தி வைப்பது தான் அரசியல் நாகரீகமாகும்!

நமது செயற்குழு எடுத்த முடிவு சரியான முடிவாகும், நேர்மையான முடிவாகும்!

அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல்-நாம் வாணத்தைக் கொளுத்தி, அது தரும் ஜொலிப்புக் காட்சிகளைக் கண்டு ரசிப்பவர்கள் அல்ல! போராட்டத் தியாகங்களைக் கண்டு ரசிப்பவர்கள் அல்ல! போராட்டத் தியாகங்களை வைத்துக் கொண்டு கட்சியை வளர்ப்பவர்களுமல்ல!

நாம் கேட்ட உறுதி மொழியை ஓரளவு தந்து விட்டார்கள்! நம்முடைய போராட்டத்திற்கும் மதிப்பளித்து, நம்முடைய செல்வாக்கைப் பற்றியும் உணர்ந்து கொண்டு விட்டார்கள்! இந்தநிலையில் நம்முடைய அறப்போராட்டத்தைத் தள்ளி வைப்பது தான் நியாயமாகும்!

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், தான்—"இந்திய சர்க்காரோடு போராடுவோம், உரிமையைப் பெறுவோம்" என்று

கறுப்புக் கொடி நிறுத்தப்பட்டது !

எங்கள் அண்ணாவின் அரசியல் இதுதான்

அமைச்சர்களே ! இனியாவது அறிந்து கொள்ளுங்கள், அந்த அற்புத மனிதரின் பெருமையை !

கூறியிருக்கிறாரே! அவர் என்ன செய்கிறார் என்பதையும் தான் பார்த்து விடுவோமே!

சென்னை மாநில சர்க்கார் சார்பாக நிதி அமைச்சர் தந்த உறுதிமொழி – டெல்லி சர்க்கார் சார்பாக உள்நாட்டு அமைச்சர் வல்லபபந்து தந்த உறுதிமொழி, நேரு பெருமகனார் எழுதிய கடிதம்–குடியரசுத் தலைவர் தந்த உறுதிமொழி கட்டாயம் காப்பாற்றபடும் என்று தான் நம்புகிறோம்!

அப்படி காப்பாற்றப்படவில்லையானால் நம்முடைய வீரம் அதற்குள் செத்தா மடிந்து விடும்! நம்முடைய தியாக எண்ணங்கள் அதற்குள் மறைந்தா போய் விடும்! ஒருக்காலும் போகாது! ஒருக்காலும் போகாது! அப்போது கொடியை உயர்த்துவோம்! போர்ப்பறையறைவோம்

விடுதலை வீரர்களைத் திரட்டி களத்தில் குதிப்போம்! உயிர்களைப் பலி கொடுப்போம்! நமது இலட்சியத்தை வெற்றியாக்கிக் காட்டுவோம்!

ஆட்சியாளர்கள் தந்த வாக்குறுதி காரணமாகத் தான் நாம் காட்ட இருக்கும் கறுப்புக் கொடி நிகழ்ச்சியை கை விடுகிறோம்! இதை எல்லோருமே கவனம் வைத்துக் கொள்ள வேண்டும்!

அடக்கு முறைகளுக்கு பயந்தல்ல, துப்பாக்கி குண்டுகளுக்கு பயந்தல்ல தடியடிகளுக்கு அச்சப்பட்டு அல்ல— ''உயிர் போய் விடுமோ'' என்று அஞ்சியுமல்ல!

நமது முதலமைச்சர் கனம் காமராஜர் சில தினங்களுக்கு முன்பு மிரட்டினாரே—உங்களை சில மணி நேரத்தில் விடுதலை செய்து விட மாட்டோம், கடுமையாகத் தண்டிப்போம்!'' என்று அதற்குப் பயந்து மல்ல!

ஒரு மணி நேரம் வைத்திருந்தாலும், ஒரு நாள் வைத்திருந்தாலும், ஒரு மாதம் வைத்திருந்தாலும் ஒரு வருடம் வைத்திருந்தாலும், ஆயுள் காலம் முழுவதும் வைத்திருந்தாலும் — அல்லது காமராசர் மந்திரி சபை எத்தனை காலம் இருக்கிறதோ அத்தனை காலத்திற்குமே சிறையிலே தள்ளி சித்திரவதை செய்தாலும் அதற்கும் அஞ்ச மாட்டோம்!

இதற்காகப் பயந்து கொண்டு ஓடி விட்டதாக எண்ண வேண்டாம்!

சென்னையிலே நடைபெற்ற மாநாட்டைப் பார்த்தவர்கள், அங்கே பொங்கி எழுந்த வீரத்தைக் கண்டவர்கள்– அந்த பாசறையிலிருந்த துடி துடிப்பை, எழுச்சி மிகு விறுவிறுப்பை கண்டவர்கள் நம்மை கிண்டல் செய்ய மாட்டார்கள்! நம் வீரத்தைப் பழித்துப் பேச மாட்டார்கள்!

மாநாட்டில் கூடியுள்ள இலட்சக் கணக்கான மக்களை விருந்துக்கு அழைக்கவில்லை, விருந்து பெறத் தான் அழைத்தார்! விழா நடத்தி மகிழ அழைக்கவில்லை — மரணத்தை அணைத்துக் கொள்ளத்தான் அழைத்தார் ''அடிபட அழைக்கிறேன், உதைபட அழைக்கிறேன், உயிரை விட அழைக்கிறேன்'' என்று தான் எல்லோரையும் கூப்பிட்டார்!

இத்தனைக்குப் பிறகும் நம் வீரத்தைப் பழிப்பார்களானால்– அவர்கள் வீரத்தின் பெருமையை அறியாதவர்கள், மனித உணர்ச்சியின் அருமையைத் தெரிந்து கொள்ளாதவர்கள் என்று தான் பொருள் கொள்ள வேண்டும்.

நமது அண்ணா முன்பெல்லாம் அடிக்கடி சொல்லி வருவது போல்–''புலி வேட்டைக்குச் செல்லும் நாம், முயல் வேட்டையில் ஈடுபடக் கூடாது' யார் எதைச் சொன்னாலும் நமக்கு புலி வேட்டை தான் முக்கியம்– முயல் வேட்டை யல்ல!

எனவே நம் செயற்குழு எடுத்த முடிவு மிகச் சிறந்த முடிவாகும். அந்த முடிவை செயல் படுத்த நாம் நிச்சயமாக முன் வருவோம்.

இந்த வெற்றி நம்முடைய உறுதியால் கிடைத்த வெற்றி, வலிவால் கிடைத்த வெற்றி, நம்முடைய அஞ்சா நெஞ்சத்தால் கிடைத்த வெற்றி என்பதை நாடறியும், நல்லவர்களின் உள்ளமும் அறியும்.

உண்மையான நாட்டுப் பற்றும் இனப்பற்றும், மொழிப் பற்று– அசைக்க முடியாத நல்ல கொள்கைப் பற்றும் கொண்ட இலட்சியம் வெற்றி பெறும் என்பதற்கு இதுவே தக்கச் சான்றாகும்.

இந்த வெற்றியைக் கண்டு நாமெல்லாம் மகிழ்வதைப் போலவே நாட்டு மக்களும் மகிழ்வார்கள்.

மாணவர்கள் மகிழ்வார்கள் அவர் தம் பெற்றோர்கள் மகிழ்வார்கள்.

போர்க்குணம் படைத்த இளைஞர்கள் மகிழ்வார்கள், அவர் தம் தாய் தந்தையர்கள் மகிழ்வார்கள்.

கலைஞர்கள் மகிழ்வார்கள், புலவர்கள் மகிழ்வார்கள். ஆசிரியர்கள் மகிழ்வார்கள் வணிகர்கள் மகிழ்வார்கள்–பல பெரும் அரசியல்வாதிகள் உள்ளுக்குள்ளேயே மகிழ்வார்கள்.

கம்யூனிஸ்டு நண்பர்கள் மகிழ்வார்கள்– பிள்ளைகளை பெற்ற காங்கிரஸ் தோழர்கள் மகிழ்வார்கள்.

இத்தனை மகிழ்ச்சிக்கும் காரணமாயுள்ள நமது அண்ணா மகிழ்வார் அவர் தம் தம்பிமார்களும் மகிழ்வார்கள்.

இத்தனை மகிழ்ச்சிக்கும் காரணமாயிருந்த சம்பத் மகிழ்வார். அவரது போர்க் குழுவும் மகிழும்

இந்தத் துவக்க வெற்றியைக் கண்டு பெரும் மகிழ்ச்சி கொள்ள முடியாவிட்டாலும்– 'நாம் கேட்டது, நாம் எதிர்பார்த்தது கிடைத்து விட்டது'' எனவே நாம் மகிழ்ச்சி பெறாமல் எப்படி இருக்க முடியும்!

இந்த வெற்றிக்குக் காரணமாயுள்ள எல்லா செயல் வீரர்களையும் பாராட்டுகிறோம். எல்லா தொண்டர்களையும் பாராட்டுகிறோம்!

வர இருந்த பெரும் விபரீதத்தை அந்த ஆட்சியாளருக்கு நேர இருந்த பெரும் களங்கத்தை அகற்ற பணிவோடு வந்து தாழ்மையோடு வந்து, வாக்குறுதியளித்து — ''இந்தியை திணிக்க மாட்டோம், உரிமையைப் பெற போராடுவேன்'' என்று கூறிய நிதியமைச்சரையும்—சென்னை மாநிலத்து முதலமைச்சரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்!

அதே போல் பாபுராஜேந்திர பிரசாத்துக்கும், எவருக்கும் அஞ்சாத உள்நாட்டு அமைச்சர் பந்துவுக்கும் எங்கள் நன்றியை போராட்ட வீரர்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்!

மேல் நாட்டு மேதைகளுக்கு மட்டுமே மதிப்பளித்து வந்த— மேல் நாட்டு அரசியலுக்கே முதலிடம் தந்து வந்த நேரு பெருமகனார் நமது போர்க் குழுத்தலைவர் சம்பத்து அவர்களுக்கு கடிதமெழுதி, ''கொடுத்த வாக்குறுதியை மீற மாட்டேன்'' என்று விளக்கம் தந்த நேருவுக்கும் நமது நன்றி!

கால்களை இழக்க இருந்த படைவீரர்களே! கரங்களை இழக்க இருந்த இளைஞர்களே! உயிரை தத்தம் செய்து கொடுக்க துடி துடித்துக் கொண்டிருந்த வாலிபர்களே! தாய்மார்களே! வெற்றி விழா கொண்டாடுங்கள்! வீடெங்கும் வெற்றி விழா கொண்டாடுங்கள்!

இந்தி வாபஸ் பெறவில்லையானால் ஆட்சியாளர்கள் தந்த உறுதி மொழி காற்றில் பறக்க விட்டார்களானால் மீண்டும் போர் முழக்கம் ஒலிக்கும்! மீண்டும் அண்ணாவின் ஆணை பிறக்கும்! அப்போது ஓடி வருக! அப்போது ஓடி வருக!

நமக்கோர் இலட்சிய முண்டு, தனித் திராவிடம் பெறுவதே நமது முதல் இலட்சியம்! உயிர் இலட்சியம்! அந்தப் போராட்டத்திற்கு நம்மையெல்லாம் தயார்படுத்திக் கொள்ள இந்த வெற்றி விழாவில் உறுதி கொள்ளுவோம்!

அறப்போர் சிறப்பிதழாக மலர இருந்த மாலைமணி, அறப்போர் வெற்றி மலராக மலர்ந்து உங்கள் கரங்களிலே தவழ்கிறது!

காயம்பட்டவர்களின் எண்ணிக்கையை சொல்ல இருந்த மாலைமணி செத்து மடிந்தவர்களின் தொகையை சொல்லயிருந்த மாலைமணி இந்த வெற்றிச் செய்தியை அறிவிக்கிறது!

இந்த வெற்றி முதல் வெற்றி, துவக்க வெற்றி! திராவிடத்தின் விடுதலையே நமக்கு இறுதி வெற்றி அந்த வெற்றியை நோக்கிப் புறப்படுங்கள்!

பணிந்த ஏகாதிபத்தியத்தையும் வாழ்த்துங்கள்! திமிர் பிடித்தவர்களின் கொட்டம் அடங்கியதற்காகப் போற்றுங்கள்!

இந்த வெற்றிச் செய்தியை ஊரார்களுக்கும், உறவினர்களுக்கும், பெண்டு பிள்ளைகளுக்கும் சொல்லிச் சொல்லி மகிழுங்கள்! சொல்லி மகிழுங்கள்!

பொங்கி எழுங்கள்! பொங்கி எழுங்கள்!

ஈ.வி.கே.சம்பத்

இன்று நாட்டு மக்களிடையே எழுந்துள்ள உணர்ச்சியையும், உத்வேகத்தையும், காணும் போது எனக்கே ஒரு தனி உற்சாகம் பிறக்கிறது!

தமிழகம் முழுவதும் "நாடு நாடு" என்று முழங்கும் மக்களைத் தான் பார்க்கிறேன்—"மொழி மொழி" என்று வீர கர்ஜனை புரியும் தோழர்களைத் தான் காண்கிறேன்! மக்களிடம் பெருக்கெடுத்தோடும் இந்த உணர்ச்சிப் பிரவாகத்தைக் காணும் போது என் உடம்பெல்லாம் சிலிர்க்கிறது! என் உள்ளமெல்லாம் உற்சாகப் பெரு வெள்ளத்தால் உந்தி, உந்தி எழுகிறது! எனது அண்ணன் அடிக்கடி சொல்லுவது போல் "இப்படைத் தோற்கின் வேறு எப்படைத் தான் ஜெயிக்கும்!"

"அடிமைப் பட்டுக் கிடக்கும் நாடு என்றுமே அடிமைப்பட்டுக் கிடக்காது—மாற்றானுக்கு மண்டியிட்டுக் கிடந்த இனம் என்றுமே மண்டியிட்டுக் கிடக்காது" என்ற வரலாற்று உண்மையைத் தமிழகம் இன்று எடுத்துக் காட்டிக் கொண்டு வருகிறது!

உலகத்தில் நம்மை விட கேவலமாகக் கிடந்த நாடுகளெல்லாம், நாகரீகத்திலும், பண்பாட்டிலும் மிகக் கீழ்த்தரமாகக் கிடந்த நாடுகளெல்லாம் இன்று தலை நிமிர்ந்து நிற்பதைக் காண்கிறோம்! எத்தனை சின்னஞ்சிறிய நாடுகள் பெரிய பெரிய நாடுகளை மிரட்டுகின்றன! ஆமை போல் ஊமை போல் அடங்கிக் கிடந்த நாடுகளுக்கு அந்த உரிமை எப்படிக் கிடைத்தது!

உலக வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பாருங்கள்! நாயினும் கேவலமாக வாழ்ந்த இனங்களில் எத்தனையோ இனங்கள் மிக உன்னதமான நிலையை அடைந்திருக்கின்றன! வல்லமை பொருந்திய ஏகாதிபத்தியங்கள் என்று பலரால் வாணிக்கப் படும் பெரிய பெரிய வல்லரசுகளெல்லாம் இன்று எப்படி எப்படி அடங்கி, ஒடுங்கி போய்விட்டன! இந்த வீரம் செறிந்த வரலாற்றுச் சுவடிகளைப் படித்தால் நமக்கு எப்படி உணர்ச்சி பிறக்காமல் இருக்கும்? நமக்கு எப்படி உரிமையின் மீது பாசம் ஏற்படாமல் இருக்க முடியும்!

மிகக் கேவலமாக வாழ்ந்த இனங்களெல்லாம் இன்று உரிமை பெற்ற இனங்களாக வாழும் போது—பரம்பரை பரம்பரையாக நாகரீகத்தோடும், பண்பாட்டோடும் வாழ்ந்து வந்த நாம் மட்டும் அடிமைகளாக, தாசர்களாக வாழ வேண்டுமா?

ஆண்ட பரம்பரை நாம்—இன்று ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்! இந்த வினா எல்லோருடைய உள்ளத்திலும் எழ ஆரம்பித்து விட்டது! இந்த நேரத்தில் யார் நம்மை எதிர்த்தாலும், எதிர்ப்பவர்களுக்கு எத்தனை சக்திகள் தான் இருந்தாலும்—அந்த சக்திகள் அனைத்தும் பொடிப் பொடியாகி விடும் என்பதை கவனத்தோடு, மிக உன்னிப்போடு கவனிக்க வேண்டும்!

தமிழகம் இத்தனை வீர உணர்ச்சியைப் பெற்றிருக்கின்ற நேரத்தில் தான் நம்முடைய எதிரிகள் நம்மை சோதித்துப் பார்க்கக் கிளம்பி இருக்கின்றனர்!

நாட்டைப் பறி கொடுத்து விட்டு நாதியற்ற நிலையில் கிடக்கும் நமக்கு இன்னொரு பெரும் சோதனையும் ஏற்பட்டிருக்கிறது நம்முடைய மாற்றார்கள் நமக்கு ஒரு பெரும் சவாலை விட்டிருக்கிறார்கள்!

நம்முடைய மொழி நமக்குக் கூடாது—நாம், சின்ன வயதில் சிங்காரமாகப் பேசி வந்த மொழி நமக்குக் கூடாது என்று சட்டங்களைப் பிறப்பித்து விட்டார்கள்! 'இந்தி தான் படிக்க வேண்டும், இந்தி படித்தால் தான் உனக்கு வாழ்வு கிடைக்கும்" என்று பறையறைப்பட்டு விட்டது!

இந்தியத் துணைக் கண்டத்து தலைவர் மக்கு கட்டளையிட்டு விட்டார்!

மனிதனுடைய விழி, மொழி தான் என்பதை உணர வேண்டும்! நம்முடைய மொழி அழிந்து விட்டால் நாமெல்லாம் குருடர்களாகி விடுவோம்!

குருடர்களாக, உலகத்தில் நடைபெறும் பெரும் பெரும் சம்பவங்களை அதிசயங்களை, அற்புதங்களை காண முடியாதவர்களாக நீங்கள் வாழத் தான் போகிறீர்களா?

ஒரு நாட்டை என்றென்றும் அடிமைப்படுத்தி வைக்க வேண்டுமானால் முதலில் மொழியைத் தான் அழிக்க வேண்டும்!

மனித இனத்தின் விடுதலை வேட்கையை அழிப்பதற்கு, அந்த உணர்ச்சியை நசுக்குவதற்கு கத்திகளையோ, கபடாக்களையோ தூக்கித் திரிய வேண்டியதில்லை — அவனுடைய, சொந்த மொழியை அழித்து விட்டால் எல்லாம் அழிந்து விடும்! மானம், மரியாதை ரோஷம் எல்லாம் கூட மறைந்து விடும்!

மொழி அழிந்தால் நாகரீகம் அழியும், பண்பாடு அழியும், கலை அழியும், கலாச்சாரம் அழியும்! முடிவில் நாடே அழியும்!

மனிதனுக்கு மானம் தான் பெரிது! மானமில்லாதவன் மனிதனாக மாட்டான்!

தமிழகத்திலுள்ள மக்களுக்கு மானமில்லை, ரோஷமில்லை என்ற கருத்தில் நம்முடைய உரிமைகளைப் பறிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர்! தமிழகத்தில் அப்படி மானத்தை இழந்து எவரும் கிடக்கவில்லை!

துரதிர்ஷ்ட வசமாக இந்த நாட்டில் ஒரு சிலர் அப்படியும் இருக்கிறார்கள்! மானத்தைவிட, சோற்றுச் சுவைதான் பெரிது என்றும், தாங்கள் வாழ்கின்ற சிறந்த வாழ்வு தான் பெரிதென்றும் எண்ணி—நாட்டையும், நாட்டு மக்களையும் அந்நியர்களிடம் அடகுவைத்து வாழ்ந்து வருகிறார்கள்!

அப்படிப்பட்ட துரோகிகள் வெட்கித்தலை குனிய வேண்டும்! அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் தவிடு பொடியாக்க வேண்டும்!

நாம் உறுதியோடும், உற்சாகத்தோடும், எதைக் கண்டும் அஞ்சாமலும் போராடுவோமானால் நம்முடைய எண்ணம் நிச்சயமாக நிறைவேறும்!

நாம் எந்தக் காலத்திலுமே தோல்வியைக் கண்டதில்லை! நாம் இருக்கிறோமோ, செத்துமடிகிறோமோ—நாம் போராட்டத்தின் பலன்களை அனுபவிக்கிறோமோ, இல்லையோ அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை! நம்முடைய பின் சந்ததிகள் உரிமையோடு வாழ்வார்கள், விடுதலை நாட்டில பெருவாழ்வு வாழ்வார்கள்! நம்மையும் அவர்கள் வாயார வாழ்த்திப் புகழ்வார்கள்!

நாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லையானால் நம்மை கோழைகள் என்று தூற்றுவார்கள், வெறும் சோற்றுத் துருத்திகள், மாமிச பிண்டங்கள் என்று பழி சுமத்துவார்கள்!

நீங்கள் அந்தப் பழியை ஏற்காதீர்கள், நீங்கள் அந்த களங்கத்திற்கு ஆளாகாதீர்கள்!

பொங்கி எழுங்கள் — கடல் அலை போல் பொங்கி எழுங்கள்!

மெயிலே, மெயிலே!

கேள்!

வெள்ளைக்காரனால் வளர்க்கப்பட்டு, வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடித்து, கங்காணி வேலை செய்து அடிமையாய் இருந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்களை அடக்கச் சொன்ன மெயில் தான் இன்று நம்மை அடக்கச் சொல்லுகிறது!

அன்று வெள்ளைக்காரனுக்கு அடிமை! இன்று காங்கிரஸ் கங்காணிகளுக்கு அடிமை!

நாளைக்கு... யாருக்கு அடிமை! அதிகாரம் யார் கையிலிருக்கிறதோ பதவி யார் கையிலிருக்கிறதோ அவர்களுக்கு அடிமை!

என் மெயிலே! அப்படித் தானே?

நமது தாயகம், இன்னும் சில நாட்களில் ஒரு பெரும் வீரம் செறிந்த காதையைக் காண இருக்கிறது! தமிழ்ப் பெருங்குடி மக்களால் தீட்ட இருக்கும் அந்தப் புரட்சிக் காதையால்—வலிவும், பொலிவும் பெற்று தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கும்—தன்மானம் பெற்றதால் தலை நிமிர்ந்து நிற்கும் தமிழகம், தனிப் பெருமையோடு தனது புது வாழ்வையும் துவக்கும், துவகக வேண்டும்!

"தன்மானம், தன்மானம் என்று சொல்லுகிறாயே—இதுவரை நீ சொல்லுகின்ற அந்த தன்மானத்தை இழந்து விட்டா கிடந்தோம்" என்று சிலர் ஐயப்பாட்டோடு கேட்கக் கூடும்! மெத்த வருத்தத்தோடு சொல்லுகிறேன்—"ஆம்" என்று! உள்ளதைச் சொல்லுவதற்கு வெட்கமென்ன? துக்கமென்ன?

நாம் இழந்து விட்ட சொத்துக்கள் ஒன்றா, இரண்டா? நாம் பறி கொடுத்து விட்ட பொருள்கள் ஒன்றா, இரண்டா? நாம் எதை, எதையோ இழந்தோம், எதை எதையோ பறி கொடுத்தோம்! அரசை இழந்தோம், பெற்ற தாய் மண்ணை இழந்தோம், பெருமையை இழந்தோம், புகழை இழந்தோம் வீரத்தை இழந்தோம்! விட்ட குறை, தொட்ட குறையால், மிச்சம் மீதி இருந்த நமது மொழியையும் இழக்க இருக்கிறோம்! இங்கே தன்மானத்தைப்பற்றி பேசுவதில் என்ன இருக்கிறது—பெருமைக்காக வேண்டுமானால் "அது" இருப்பதாகச் சொல்லிக் கொள்ளலாம்!

பழந்தமிழகத்தில் — பண்புடைய நமது பண்டைய மன்னர்கள் கொற்றத்தில் வீற்றிருந்த காலத்தில்—சங்கம் வைத்து நமது மொழியை வளர்த்தார்கள்—மொழி வளர்த்தப் புலவர்களைப் போற்றினார்கள—"முத்தமிழே எங்கள் மூச்சு" என்று அதை கண் இமை போல் காத்து வளர்த்தார்கள்! நாட்டையும், நாட்டு மொழியையும் இகழ்ந்தால் அவர்களின் நாவைத் துண்டிப்போம்" என்று வீர முழக்கம் செய்தார்கள்!

அந்தத் தமிழகத்தில், அந்த பாசமிருந்தது, அந்த பற்றிருந்தது, அந்த வீர மிருந்தது! இந்தத் தமிழகத்தில்—இந்தத் தமிழகத்தில் வாழும் அரசவை கனவான்களுக்கு அது குறுகிய புத்தியாக தெரிகிறது, வெறியாகத் தோன்றுகிறது!

என்ன தான் பண்டைய தமிழகத்திற்கு இவர்களை அழைத்து அழைத்துச் சென்று காட்டினாலும், பதவி, பாசத்தை மறைக்கத் தான் செய்யும் - அதிகாரம், வீரத்தைக் குறைக்கத் தான் செய்யும்! பதவியும், அதிகாரமும் கிடைத்து விட்டால் அடிமைத் தனம் ஒரு நாளும் கசக்காது போலும்!

எனவே தான் நம் அமைச்சர்கள் "நாடும் வேண்டாம், மொழியும் வேண்டாம்—பதவியே போதும்" என்று கிடக்கிறார்கள் போலும்!

நம்மால் அப்படி இருக்க முடியவில்லை—நாம் அப்படி இருக்க எப்படி இயலும்! நம்மு...

புலவர்களே
கலைஞர்களே
வணிகர்களே
பிள்ளைகளைப்
பெற்ற
பெற்றோர்களே
மொழிப்போர்
அழைக்கிறது
மானம்
காக்க
வருவீர்களா ?

★

நம்மைக் கோழையாக்கி வைக்கவில்லையே! எனவே தான் நாடு காக்கும் நற்பணியில் நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம்—மொழி காக்கும் பெரும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்!

நமக்குச் சொந்த மொழி ஒன்றுண்டு, அதற்குச் சிங்காரத் தமிழ் மொழி என்றும் பேருண்டு—ஆனாலும் நாம் இந்தி படிக்க வேணடுமாம், இந்தி! இந்தியத் துணைக் கண்டத்து குடியாசுத் தலைவர் இப்படி தாக்கீது அனுப்பி இருக்கிறார்!

தென்னகம் இந்தியை எதிர்க்கிறது, தென்னகத்து மக்கள் இந்தியை விரும்பவில்லை என்று தெரிந்தும்—நேரு பெருமகனார் கொடுத்த வாக்குறுதியைக் காற்றிலே பறக்க விட்டும், நம்மீது இந்தியைத் திணிக்க குடியரசுத் தலைவர் கட்டளைப் பிறப்பித்து விட்டார்!

"குடியரசு தலைவர் விடுத்திருக்கும் அந்தத் தாக்கீதை ஏற்றுக் கொள்ள முடியாது, திரும்பப் அதைப்பெற வேண்டும்" என்று நமது கழகம் முடிவெடுத்து, அதற்குத் தவணையும் தந்து விடடது! அந்தத் தவணையின் இறுதி நாள் இத் திங்கள் முப்பதாம் நாள்! குடியரசுத் தலைவர் நமது வேண்டுகோளை புறக்கணித்து விட்டால் மறு நாள்—ஆகஸ்டு 31ம் நாள், நாமெல்லாம் களத்திற்குப் புறப்பட இருக்கிறோம்!

என்பதைப்பற்றி சொல்லத் தேவையில்லை. என்னுடைய தம்பிமார்கள் போர்க் களத்தையே காணாத கோழைகளல்லவே! எத்தனை, எத்தனை களத்தை கண்டிருப்போம். எத்தனை எத்தனை தியாகத் தழும்புகளைப் பெற்றிருப்போம், எத்தனை எத்தனை தடவை சிறைபுகுந்து கொடுமைகளை அனுபவவித்திருப்போம்! ஒரு விடுதலை இயக்கம் எத்தனை தியாகங்களைச் செய்யுமோ, அத்தனை தியாகங்களையும் நாம் செய்திருக்கிறோம்!

கொடுமையாளர்களால் கண்களை இழந்தவர்களைக் கண்டோம்!

கல்நெஞ்சம் படைத்தவர்களால் காலகளை இழநதவர்களைக் கண்டோம், கரங்களை இழந்தவர்களையும் பார்த்தோம்!

இரக்கமற்றவர்களால் இன்னுயிரையும் தத்தம் செய்து கொடுத்த மாவீரர்களையும் பார்த்து விட்டோம்!

நாம் இதுவரை எதைக் காணவில்லை, எதைப் பார்க்கவில்லை,

ஜனாதிபதி வருகிறார்!

ஜனாதிபதி வருகிறார்!

சென்னைக்கு

ஜனாதிபதி வருகிறார்!

தமிழர்களே, இளைஞர்களே!

என்ன செய்யப் போகிறீர்கள் ?

எதைத் தான் அனுபவிக்கவில்லை! எல்லாம் பார்த்தாகி விட்டது, எல்லா கொடுமைகளையும் அனுபவித்தாகி விட்டது!

பிறந்தால், இறப்பது உறுதி அந்த இறப்பு—கடும் ஜுரத்திற்கோ, விஷக் காய்ச்சலுக்கோ, பக்க பிளவைக்கோ, பச்சை வாதத்திற்கோ, புழுக்கள் நெளியும் சீழ்கட்டிகளுக்கோ பலியாவதைவிட—நாட்டிற்காக, நாட்டு மொழிக்காக உயிரைத் தத்தம் செய்து கொடுப்பதில் எத்தனையோ பெருமையுண்டே! இந்தப் பெருமையை உணராதவர்கள் அல்ல என் தம்பிமார்கள்! ஆகஸ்டு 31ம் தேதி இந்தப் பெருமையை தமிழகம் காணத் தான் போகிறது!

நாம் துவங்க இருக்கின்ற இந்த அறப்போர் வெறும் மொழிப் போராட்டமாக மட்டும் இருக்காது—நாட்டின் விடுதலைப் போராட்டமாகவும் இருக்கும்! இந்த இறுதிப் போரில், மாள்வதற்குச் சித்தமாகிவிட்ட இலட்சக்கணக்கான இளைஞர்களை காண்கிறேன் — அவர்களுடைய கண்களில் தான் எத்தனை வீரம், அவர்களுடைய முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி! நானும் உற்று உற்றுத் தான் பார்க்கிறேன்—யாருக்காவது கொஞ்சம் வாட்டம், யாருடைய முகத்திலாவது கொஞ்சம் சோகம் இருக்கவேண்டுமே! என் தம்பிமார்களிடத்திலா அது இருக்கும்!

இந்த அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களை வைத்துக் கொண்டு நாம் எதற்கு அஞ்ச வேண்டும்!

"இந்தமொழிப் போராட்டம் நம் சொந்த போராட்டமல்ல" என்பதை நாட்டு மக்களுக்கு அறிவித்து எல்லோரையும்பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்!

நீங்கள் ஈடுபட இருக்கின்ற போராட்ட நாள் மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! இடையிலே இருப்பது இன்னும் இருபத்திநான்கு நாட்கள் தான்!

அதற்குள் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து விட்டு-சிரித்துப் பேச வேண்டியவர்களிடம் சிரித்துப் பேசிவிட்டு – வயதான தாய் தந்தையர்கள் இருந்தால் "தம்பி இருக்கிறான், அண்ணன் இருக்கிறான் கவலைப்படாதீர்கள்"...

...தைகள் இருந்தால் கடைசி முறையாகத் தூக்கி, வாரியணைத்து உச்சிமோந்து தன் அன்பு மனைவியாளிடம்தந்து விட்டு-கலங்கும் கண்களைத் துடைத்து விட்டு கெஞ்சியோ, கொஞ்சியோ நல்ல ஆறுதல் வார்த்தைகளைக் கூறிவிட்டு - சொல்ல வேண்டிய விஷயங்களையெல்லாம் சொல்லிவிட்டு-செய்ய வேணடிய காரியங்களையெல்லாம் செய்துவிட்டு-எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு – "வருகிறேன் தாயே, வருகிறேன் – வருகிறேன் கண்ணே, வருகிறேன்" என்று கடைசி முறையாகக் கூறிவிட்டு களம் நோக்கிப் புறப்பட்டு வாருங்கள்! இடையிலே இருக்கின்ற இந்த இருபத்தி நான்கு நாட்களில் இதையெல்லாம் செய்து முடித்து விடுங்கள்!

வருகிற நீங்கள், திரும்புவீர்களா-சந்தேகம்!

சிறையிலே அடைபடுகின்ற நீங்கள் வெளியே வருவீர்களா-அதுவும் சந்தேகம் தான்!

அப்படியே வந்தாலும் உங்கள் அன்பு மனைவியைப் பார்க்க, உங்கள் அருமைப் பெற்றோர்களைப் பார்க்க, உங்களுக்கு இரண்டு கண்களும் இருககுமா-சநதேகம்!

வரும்போது வாரியணைத்து முத்தமிட்டு வந்தீர்களே, அந்த சின்னஞ் சிறியமழலைகளை தூக்கி மகிழ உங்களுக்கு கரங்கள் இருக்குமா-சந்தேகம் தான்!

எனவே உங்களுக்குள்ள குடும்பப் பாசத்தை யெல்லாம், நேசத்தை யெல்லாம் இந்த இருபத்தி நான்கு நாட்களில் ஆசை தீர முடித்துக் கொண்டு கிளம்பி வாருங்கள்!

வரும் போது முடியுமானால் உங்கள் தந்தையை அழைத்து வாருங்கள், தாயை அழைத்து வாருங்கள் அன்பு மனைவியை அழைத்து வாருங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள், மொழிப் பற்றுடைய பெரியவர்களை அழைத்து வாருங்கள்!

நம்முடைய நாட்டை விட்டு இந்தி ஒழிகிற வரையில், நம்முடைய நாடு நல்வாழ்வு பெற்று விடுதலையடைகிற வரையில் நமது போராட்டம் நீடித்து நடைபெற வேண்டும்! இலட்சக் கணக்கான உயிர்களை காவு கொடுத்தால் தான் இந்தியை ஒழிக்க முடியும்!

அதற்கு நம்முடைய படைகளை பெருக்க வேண்டும், பட்டியலை நீட்ட வேண்டும்!

கழகத் தோழர்கள் வீடு வீடாகச் சென்று—மொழிக்கு வந்துள்ள கேட்டினை விளக்கி அவர்களுடைய நல்லாதரவையும் பெற வேண்டும்! நான் அடிக்கடி சொல்வது போல் நாட்டு மொழியைக காகக வீட்டுக்கொரு பிள்ளையை தாய்மார்கள் தந்திட வேண்டும்! இதற்கான பணிகளில் நமது கழகத்தோழர்கள் உடனடியாக ஈடுபடவேண்டும்!

பட்டியல் நீளட்டும், படை பெருகட்டும்! மொழிப் போர் வெல்லட்டும்!

தமிழ் வெறி பிடித்த வேங்கையே வெளியே வா!

— நாவலர் நெடுஞ்செழியன் —

"இன்பத் தமிழ் நாட்டின் பெருமையையும், - சொன்னாலே நாவெல்லாம் இனிக்கும் செந்தமிழ் மொழியையும் காக்க செந்தமிழ் நாட்டினரே வாரீர், வாரீர்" என்று இந்த நாட்டு இளைஞர்களை யெல்லாம், தமிழ்ப் புலவர்களை யெல்லாம், நம்மை யெல்லாம் பெற்றெடுத்த வீரத் தாய்மார்களை யெல்லாம் முதலில் அழைக்கின்றேன்!

டெல்லி ஏகாதிபத்திய வெறியர்கள் நம்மீது இந்தியைப் புகுத்தி—இனிமை வாய்ந்த நம் மொழியை, எளிமை வாய்ந்த நம் மொழியை-இலக்கணத்தையும், இலக்கியத்தையும் பெற்று வளமோடு வாழும் நம் மொழியை-கவர்ச்சியால் சிறப்பும், அழகுச் சொற்களால் பெருமையும் கொண்ட நம் மொழியை—தொன்மை வாய்ந்த நம் அருந்தமிழ் மொழியை ஒழிக்க முற்பட்டுக் கிளம்பி இருக்கின்றனர்! நம்மிடமிருந்து எதைப் பறிக்க நினைக்கிறார்கள்! மனிதனுக்கு எது உயிரோ, மனிதனுக்கு எது மூச்சோ அதையே பறிக்க நினைக்கிறார்கள்!

மனிதன் வாழ, பேச, தன்னைப் பற்றியும், தன் நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ள, தனுடைய நாகரீகத்தைப் பற்றியும், தன்னுடைய பண்பாட்டைப் பற்றியும் புரிந்து கொள்ள எது தேவையோ, அந்த உயரிய பொருளையே தட்டிப் பறிக்கக் கிளம்பி இருக்கின்றனர்!

"தமிழர்களே! உங்களுடைய உயிரைக் கொடுத்து விட்டு வாழுங்கள், உங்களுடைய மூச்சை நிறுத்தி விட்டு வாழுங்கள்" என்று டெல்லி ஏகாதிபத்யம் நமக்குக் கட்டளை பிறப்பித்து விட்டது! நம்மை யெல்லாம் வெறும் எலும்புக் கூடுகளாக, நடமாடும் பிணங்களாக—பசித்த நேரத்தில் எதை எதையோ அடித்துச் சாப்பிடும் மிருகங்களைப் போல் வாழுங்கள் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள்!

பத்து மாதம் சுமந்து நம்மைப் பெற்று தலாட்டி, சீராட்டி, பாலூட்டி, கண் இமை போல் காத்து வளர்த்த நம் தாய்க்கும்-அன்பையும், அறநெறியையும், பண்பையும், நல்ல நாகரீகத்தையும் நமக்களித்து- நல்லறிவோடு பகுத்தறிவையும் தந்து, நாம் சிறப்போடும், சீரோடும் வாழ்வதற்குக் காரணமாயிருந்த நம் தமிழ் மொழிக்கும் ஏதும் வேற்றுமையில்லை! நமக்கு, தாய் மீது எத்தனை பாசமுண்டோ, அத்தனை பாசம் மொழி மீதும் உண்டு! நமக்குத் தாய் மீது எத்தனை பரிவுண்டோ, அத்தனை பரிவும் நமக்கு மொழி மீதும் உண்டு! நமக்குத் தாய் மீது எத்தனை அன்புண்டோ, அத்தனை அன்பு மொழி மீதும் உண்டு!

தாயற்றவன், தாயைப் பறி கொடுத்தவன் எப்படி அனாதையாய்த் தவிக்கிறானோ-சிற்றன்னையின் கொடுமைகளுக்கு ஆளாகி எப்படி சித்ரவதைப்படுகிறானோ, அப்படித் தான் மொழியற்றவனுடைய கதியும்! தாய்மொழியை இழந்து விட்டால் இந்தி வெறியர்களுடைய கொடுஞ் செயல்களுக்கு ஆட்பட்டு, அடங்கி, ஒடுங்கி அடிமையாகி முடிவில் அழிந்தொழிய வேண்டியது தான்!

இதை அறிந்து தான்-இந்த வஞ்சக எண்ணத்தோடு தான் நம் மீது இந்தியை திணிக்க முன் வந்திருக்கிறார்கள்! சூழ்ச்சியும், வஞ்சகமும் நம்மை வீழ்த்தி விடாமலிருக்க, அந்த சூதுக்காரர்களிடமிருந்து தப்பிக்க அந்த நயவஞ்சக எண்ணம் படைத்தவர்களிடமிருந்து விடுபடத் தான், நாம் அறப் போரைத் துவங்கி யுள்ளோம்!

இந்தி வெறியர்கள், பண பலத்தால், அதிகார பலத்தால் நம்மை வீழ்த்தி விடலாம் என்று கனவு காண்கின்றனர்! இங்குள்ள கள்ளமார்க்கட்காரர்களும், பஸ்ருட பர்மிட்காரர்களும், பதவிப்பித்தர்களும், எடுபிடிகளும்— எதையோ பெற்று எப்படியோ ஏற்றமடைந்து விட்ட ஏனோ தானோ பேர் வழிகளும், அந்த வெறியர்களுக்கு வால் பிடித்து, கங்காணி வேலைகள் புரிந்து வருகின்றனர்!

"இந்தி தான் இந்த நாட்டிற்குப் பொது மொழி-இந்தி படித்தால் தான் உத்தியோகம் உண்டு இந்தி படித்தால்தான் அஞ்சல் நிலையங்களில் வேலை கிடைக்கும் இந்தி படித்தால் தான் ரயில்வே பணிமனைகளில் வேலை கிடைக்கும், இந்தி படித்தால் தான் மத்திய அரசு பணிமனைகளில் வேலை செய்யலாம்! இந்தி படித்தால் தான், இந்த வேலைகள் கிடைப்பதற்கான சூழ்நிலைகள், வாய்ப்புகள், வசதிகள் கிடைக்கும்" என்று திட்டவட்டமாக வடவர்கள் எடுத்துச் சொல்லி விட்டார்கள்!

"1965க்குப் பிறகு இந்தி பொது மொழியாகிவிடும் - அதற்கான நடவடிக்கைகளை இப்போதிருந்தே எடுக்க வேண்டும்" என்று இந்தியத் துணைக் கண்டத்து குடியரசுத் தலைவர் தெளிவாக, விளக்கமாக, கருத்துகுருடர்களுக்கும் புரியும்படியாக எடுத்துச் சொல்லி விட்டார்! படித்தவர்களுக்கு மட்டுமல்ல, பாமரர்களுக்கும், கைநாட்டுப் பேர்வழிகளுக்கும் புரியும்படியாகவே அவருடைய ஆணை இருக்கிறது!

ஆனால், நம்முடைய மேதாவிலாசம் பெற்ற அமைச்சர்களுக்கு மட்டும் இன்னும் இது தெளிவாகப் புரியவில்லை போலும்! அதிலும், அதிமேதாவியாக விளங்கும், நீதிக்கும், மதிக்கும் அமைச்சராக இருக்கும் கோவைத் திலகம் சுப்பிரமணியத்திற்கு சுத்தமாகவே புரியவில்லை என்று தான் நினைக்கிறேன்!

குடியரசுத் தலைவரின் கட்டளையை புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு அவர் ஒன்றும் சைபர் பேர் வழியும் அல்லவே. படித்தவர், பட்டம் பெற்றவர் வழக்கறிஞர்! அப்படிப்பட்டவருக்கு இந்த சாதாரண விஷயம் புரியாமல் இருக்கும் என்று சொல்லுவதற்கில்லை! புரியாதவர் போல் பாவனை செய்கிறாரா? தெரியாதவர் போல் பாசாங்கு செய்கிறாரா?

நம்முடைய கோவை திலகம் சுப்பிரமணியம் சொல்லுகிறார்—"இந்தி எதிர்ப்பா? எதற்காக? இந்தி எங்கே இருக்காம்? இந்தியைத் திணிப்பதாக யார் சொன்னதாம்" என்று கிண்டல் செய்கிறார்!

வாங்குகிற சம்பளத்திற்கு நியாயமாக, ஒழுங்காக வேலைகளைத் தான் செய்வார்களே தவிர-இப்படி கங்காணி வேலை செய்து,-வஞ்சகத்திற்கும், சூதுக்கும் துணை போகிறவர்களை நாம் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை!

நம்முடைய நிதி அமைச்சர் கேட்கிறார் "எங்கே இருக்கிறது இந்தி" என்று! எங்கே இல்லை இந்தி? இந்தி இல்லாத இடத்தை முதலில் சொல்லு! பிறகு நான் இருக்கிற இடங்களைச் சொல்லுகிறேன்!

உள்ள நிலையை எடுத்துச் சொல்லாமல் மக்களை ஏமாற்றித் திரிவது அமைச்சர்களுக்கு அழகாகாது!

பதவிக்காக, அதிகாரத்திற்காக எதையும் செய்வது நேர்மையாகாது! நீதி தான் வெல்லும், நியாயம் தான் வெற்றி பெறும்!

நமக்கிருக்கிற முக்கியபிரச்னையெல்லாம் முதலில் நாணயமற்றவர்களின் கையிலிருந்து—, நேர்மையற்றவர்களின் கையிலிருந்து நாடு விடுபட வேண்டும்! நாடு விடுதலைப் பெற்றால் தான் நமக்கு விமோசனம் உண்டு! அதற்கு நாம், முதலில் நம் மொழியை காத்து வளர்க்க வேண்டும்! நம் மொழியை அந்நியர்களிடமிருந்து அழியாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்!

இதற்காகத் தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கி இருக்கிறோம்!

ஆகஸ்டு 31-ம் நாள் தமிழகமெங்கும் இந்தியை எதிர்த்து கண்டன ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெறும்! அதற்குப் பின்பு நாம் இறுதிப் போராட்டத்தையும் நடத்த இருக்கிறோம்!

செங்குருதியைச்சிந்தி, உயிரை பிணமலைகளாக அடுக்கித் தந்து மொழியைக் காக்கும் வீரர்கள் இங்கு ஏராளம், மிக ஏராளம்!

"இந்தி வந்து புகுந்தது நாட்டினிலே. இன்னும் என்ன செய்கின்றீர் வீட்டினிலே" என்று உங்கள் அனைவரையும் கேட்கிறேன்!

"பங்கம் விளைந்திடில் தாய் மொழிக்கே, உடற் பச்சை ரத்தம் பரி மாற்றுவோம்" என்று வீர சபதம் பூண்டு வாருங்கள்!

ஆற்றல் படை, அறிவுப் படை இளைஞர் படை ஏறு நடை போடும் நம் எழுச்சி படை முன் இந்தி வெறியர்கள் எம்மாத்திரம்! எம்மாத்திரம்!

தமிழ் வெறி பிடித்தலையும் வேங்கையே! வெளியே வா! உன் வீரத்தைக் காட்டு! உன் தாய் மொழியைக் காக்க உன் உதிரத்தைச் சிந்து!

வாட்டம் போக்கும் தஞ்சை மாவட்டம்! நம் கோட்டமாகி விட்டது!

பட்டி தொட்டி எங்கும் நம் படைகள்! பார்க்குமிடமெல்லாம் நம் கொடிகள்!

அண்ணா இல்லாத வீடில்லை— அவர் சொல் பேசாத வீரனில்லை! வாழ்க! தஞ்சையே, நீ வாழ்க!

நாம், சுயமரியாதைச் சங்கம் வைத்து—ஜாதிகளை, மதங்களை, சாஸ்திரங்களை, சம்பிரதாயங்களை மூட பழக்க வழக்கங்களை ஒழித்துக் கட்டி புதிய சமுதாயத்தை அமைத்திடும் பணியில் ஈடுபட்டிருந்த அந்த காலத்திலேயே தஞ்சை நமக்கு சொந்த மாவட்டமாகவே இருந்து வந்தது!

இந்தப் பணியில் வெற்றி பெற்று, திராவிடர் கழகமாக மாறி இன உணர்ச்சியையும், நாட்டுப் பற்றையும் ஊட்டி செயல் வீரர்களை தோற்றுவித்துக் கொண்டிருந்த அந்த காலத்திலேயும் தஞ்சைத் தரணி வேறு யாருக்குமே தலை குனிந்து அடிமைபட்டுக் கிடந்ததில்லை

அதற்குப் பின் நமது மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திரண்டு நிற்கும் விடுதலை சேனைக்கும்—அந்த விடுதலைப் பாசறைக்கும் அந்த செல்வாக்கு ஒரு துளியும் குறையவில்லை!

கேள்விப்பட்டிருப்பீர்கள் — மாவீரன் மாயவரம் நடராஜனைப்பற்றி!

நமது இயக்க வரலாற்றுச் சுவடிகளிலே படித்திருப்பீர்கள்— நாகைமணியின் பெரும் பணிகளைப் பற்றி- அவர் செய்திட்ட அருந் தொண்டுகளைப்பற்றி!

அஞ்சாநெஞ்சன் அழகிரிச்சாமியைத் தான் உங்களில் பலருக்குத் தெரியுமே! அந்த அற்புத மனிதன் சாதித்த சாதனைகளைப் பற்றிதான் கேள்விப்பட்டிருப்பீர்களே! காசக்கிருமிகளுக்குப் பலியாகி ரத்தத்தைக் கக்கிக் கொண்டிருந்த நேரத்திலும் "கொள்கை கொள்கை" என்று முழங்கினனே — அந்த உத்தமன் பிறந்த மாவட்டம் சொத்தையாகி விடுமா? சோடையாகி விடுமா?

மாயவரம் நடராஜனும், நாகைமணியும், பட்டுக்கோட்டை அழகிரி சாமியும் செய்த பணி இன்று காய்த்து, பூத்து, கனி குலுங்கும் சோலையாகி விட்டது! நினைத்தால் நெஞ்சமெல்லாம் பூரிக்கிறது, உள்ளமெல்லாம் மகிழ்கிறது!

ஏறத்தாழ எழெட்டு ஆண்டுகளுக்குப் பின்பு என் சொந்த மாவட்டமாகிய தஞ்சை மாவட்டம் செல்ல சமீபத்தில் வாய்ப்புக் கிடைத்தது!

மாயவரத்திற்குப் பக்கத்திலே ஒரு சிற்றூர்—அந்த சிற்றூருக்கு பாலையூர் என்று பெயர்—அது தான் நான் பிறந்த ஊருமாகும்! அங்கே என் சகோதரனுக்கு திருமணம் நடைபெற்றது—சுயமரியாதைத் திருமணம்! திருவாளர் டி. கே. சீனுவாசனும் வந்திருந்தார்,

சுயமரியாதைத் திருமணம் என்றால் உங்களுக்கு ஒரு பெரும் அதிசயமோ, ஒரு பெரும் ஆச்சரியமோ ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை—ஆனால் எனக்கு அது ஒரு பெரும் அதிசயமாகவே இருந்தது—ஒரு பெரும் அற்புதமாகவே இருந்தது!

அந்த சிற்றூருக்கும், அரசியலுக்குமே வெகு தூரம்! அந்த ஊர் தெரிந்து கொண்டிருந்ததெல்லாம் காந்தி ஒருவரைத் தான்-அதற்கடுத்து வேறு ஒருவரைத் தான்! ஆனால் அவர்கள் காங்கிரஸ்காரர்களுமல்ல! காலையிலே எழுந்திருக்க வேண்டியது—சில பலன்களை கொஞ்ச நேரம் சுற்றிப் பார்க்க வேண்டியது—பிறகு நாள் முழுவதும் சீட்டாட்டம், ஊர் வம்பு! இது தான் அவர்களுக்குத் தெரிந்த அரசியல்!

அந்த ஊருக்கு முதல் சுயமரியாதைக்காரனே நான் தான்! பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தன்னந்தனியாக இருந்து பெரியாரை சொல்லிப் பார்த்தேன், அண்ணாவை, அவரின் மேதாவிலாசத்தை, அவரின் அற்புதத்தை, அறிவின் திறமையை விளக்கி விளக்கிப் பார்த்தேன்! யாருக்குமே புரியவில்லை!

அந்த ஊரில் தான் இன்று சுயமரியாதைத் திருமணம்! ஏன் எனக்கு ஆச்சரிய மேற்படாது? ஏன் எனக்கு இவைகளெல்லாம் அதிசயமாக இருக்காது!

அன்று, பால் மணம், மாறாத குழந்தைகளாக காட்சியளித்தவர்களெல்லாம், இன்று பக்குவமடைந்த இளைஞர்களாக காட்சியளிப்பதைக் காண்கிறேன்—அவர்கள் அத்தனை பேரும் நம் படை வீரர்களாக இருப்பதையும் காண்கிறேன்! "இது தான் நாங்கள் புதிதாகக் கட்டும் நாவலர் படிப்பகம், இது தான் நாங்கள் ஏற்றி வைத்த கொடி, இந்த படிப்பகத்தை நம் அண்ணாவைக் கொண்டு தான் திறக்க வேண்டும்" என்று அந்த இளைஞர்கள் என்னைப் பார்த்துக் கேட்ட போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேது? எல்லை தான் ஏது?

இந்த சிற்றூர் மட்டும் இந்தப் புரட்சிப் பாதையில் அடியெடுத்து வைத்து விடவில்லை. தஞ்சை மாவட்டம் முழுவதிலுமே இந்த புரட்சியைக் கண்டு பெருமிதம் கொண்டேன்.

அங்கிருந்து திருவாரூர் வரையில் சாலை வழியே காரில் சென்ற போது இருமருங்கிலும் நான் கண்ட காட்சியை எப்படி வர்ணிப்பது. எப்படி எப்படி உங்களுக்கு எடுத்துச் சொல்லுவது என்று தான் புரியவில்லை.

நமது கொடிகள் பறக்காத ஊர்களில்லை, நமது கொள்கைகள் முழங்காத இடமுமில்லை! எந்த வீட்டை நோக்கினாலும் நமது அண்ணா இருக்கிறார், நமது நாவலர் நெடுஞ்செழியன் இருக்கிறார், நமது சொல்லின் செல்வர் சம்பத் இருக்கிறார், நமது கலைஞர் கருணாநிதி இருக்கிறார்!

அரசியலிலே பாலைவனமாகக் கிடந்த ஊர்களெல்லாம் இன்று பசும் சோலையாகக் காட்சியளிக்கின்றன!

எங்கே நமது கொடிகள் பறக்க முடியாதென்று எண்ணினோமோ அங்கெல்லாம் நமது கொடி எத்தனை காலம் பாடுபட்டாலும் அருந்தவம் புரிந்தாலும், கடுந்தவம் செய்தாலும்—எந்தெந்த வீடுகளில் நமது அண்ணாவின் படத்தை மாட்ட முடியாது என்று திடமாக எண்ணி வந்தோமோ அங்கெல்லாம் ஆள் உயரத்திற்கு நமது அண்ணாவின் படத்தைக் காண்கிறேன்!

(14ம் பக்கம் பார்க்க)

(13ம் பக்கத் தொடர்ச்சி)

எப்படி வந்தது இந்த சக்தி—புரியவில்லை—தெரியவில்லை!

ஆத்தூர், சேத்தூர் கூத்தனூர், குமாரமங்கலம்—இரனூர், கிளியனூர்—கழனிவாசல், கடக்கம்—வழுவூர், வாழ்மங்கலம்—விளாகம், காருகுடி—எடக்குன், தந்தங்குடி—மலக்குடி, மணபந்தல்—மேமாத்தூர், கீழ்மாத்தூர்—ஏனங்குடி, மேனங்குடி—குருங்குளம் நெடுங்குளம்—செம்மேனி, நெடுவாசல்—நெடுஞ்சேரி, பெருஞ்சேரி—நீலவெளி, பெரப்பூர்—நல்லடை, நத்தம் இப்படி எண்ணிப் பார்க்க முடியாத ஊர்களிலெல்லாம் நாம் இருக்கிறோம். நாம் இருக்கிறோம் என்பதைவிட நாம் தான் இருக்கிறோம், நாம் மட்டுமே தான் இருக்கிறோம் என்று கூடச் சொல்லலாம்!

இந்த கண்கொள்ளா காட்சியை நான் மட்டும் காணவில்லை, கனம் காமராஜரும் கண்டு களித்திருக்கிறார்! அங்கே ஊர் ஊராகச் சென்ற காமராஜருக்கு, தெருத் தெருவாகச் சென்ற காமராஜருக்கு இது எப்படி புரியாமல் இருக்க முடியும்! புரிந்து தான் என்ன பயன்? தெரிந்து தான் என்ன லாபம்? "தஞ்சையே! எங்களை ஏமாற்றிவிட்டாயா?" என்று காமராஜர் புலம்பித்திரிய வேண்டியது தான்!

இத்தனை செல்வாக்கிற்கும் யார் யார் காரணம்? யாருடைய பணியால் தஞ்சை இத்தனை பெருமையை-செல்வாக்கை யடைந்தது!

ஆயிரக்கணக்கான தொண்டர்கள், இளைஞர்கள், செயல் வீரர்கள் அரும் பணி புரிந்திருக்கிறார்கள்! ஊண் இன்றி, உறக்கமின்றி—உற்றார், உறவினர்களின் வெறுப்போடு வாழ்க்கையையே தத்தம் செய்து கொடுத்து பணி புரிந்திருக்கிறார்கள்!

இவர்களில் யாரைச் சொல்லுவது—யாரை விடுவது?

சுயமரியாதைக் காலந்தொட்டு அயராது பணிபுரிந்து வரும் குடந்தை நீலமேகத்தைப்பற்றிச் சொல்லுவதா—அல்லது மாவட்டச் செயலாளர் இளங்கோவைப் பற்றிச் சொல்லுவதா? யாரைச் சொல்வது யாரைவிடுவது?

கும்பகோணம் சின்னத் தம்பியைப் பற்றிச் சொல்லுவதா—மன்னார்குடி நாராயணசாமியைப் பற்றிக் கூறுவதா?

செயல்வீரர் மாயவரம் கிட்டப்பாவைப் பற்றிச் சொல்லுவதா-இலட்சியவீரன் மங்கை நல்லூர் வெங்கிட கிருஷ்ணனைப் பற்றிச் சொல்லுவதா? யாரைச் சொல்லுவது, யாரை விடுவது?

இலட்சிய விளக்கம் தந்து, தினம்,தினம் மக்கள் படையைப் பெருக்கும் பொறையார் ஜம்புவைக் குறிப்பிடுவதா—விளநகர் கணேசனை குறிப்பிடுவதா?

தஞ்சையில் பெரும் பணிபுரியும் பெத்தண்ணனைக் குறிப்பிடுவதா? காங்கிரஸ் கோட்டையை வீழ்த்தி இலட்சிய புரிக்கு பயணம் செய்து வரும் தஞ்சை நகரசபை உறுப்பினர்களைக் குறிப்பிடுவதா? யாரைச் சொல்வது யாரை விடுவது?

சிறைக்குச் சென்று சித்திரவதைப்பட்ட கழனிவாசல் முத்தையனைக் குறிப்பிடுவதா? மற்ற மற்ற நண்பர்களைக் குறிப்பிடுவதா? யாரைச் சொல்லுவது யாரை விடுவது?

குற்றாலத்து நண்பர்களைக் குறிப்பிடுவதா? கொடவாசல் தோழர்களைச் சொல்லுவதா? யாரைச் சொல்லுவது, யாரை விடுவது?

பேரளம் தோழர்களைக் குறிப்பிடுவதா, காரைக்கால் செயல் வீரர்களைச் சொல்லுவதா?

திருவாரூர் தோழர்களைக் குறிப்பிடுவதா? நாகை நண்பர்களை குறிப்பிடுவதா?

பட்டி தொட்டி எங்கும் நமது வீரர்கள்—ஊர் பேர் தெரியாத இடங்களிலெல்லாம் நமது படை வீரர்கள்!

இலட்சியம் ஒன்றையே மூச்சாக வைத்து கொள்கை ஒன்றையே பேச்சாக வைத்து, குறிக்கோள் ஒன்றையே செயலாக வைத்து அரும்பணி புரிந்து வரும் செயல் வீரர்கள் ஆயிரக்கணக்கில்—இல்லை இல்லை—இலட்சக் கணக்கில்! அத்தனை பேருடைய உழைப்பும் தான் அந்த மண்ணை வளமாக்கிறது! அந்த மண்ணை வீர புரியாக்குகிறது! அந்தத் தோழர்களுக்கெல்லாம், அந்த செயல் வீரர்களுக்கெல்லாம் எங்களுடைய நன்றியை, எங்களுடைய அன்பை தெரிவித்து அவர்களுக்கு ஊக்கமளிக்க விரும்புகிறோம்.

மக்களுடைய வாட்டம் போக்கும் தஞ்சை மாவட்டத்தை, நம் கோட்டையாக்கித்தந்த அந்த செயல் வீரர்களைப் பாராட்டுகிறோம்!

நமது முதலமைச்சர் கனம் காமராஜர் அடிக்கடி சொல்லி வருவதை நீங்கள் கவனம் வைத்துக் கொள்ள வேண்டும்!

"கூட்டம் தான் உங்களுக்கு, ஓட்டுகளெல்லாம் எங்களுக்கு தான்" என்று சொல்லி வருவதை நீங்கள் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்!

"இந்த நாட்டில் பணம் இருந்தால தான் வெற்றி பெற முடியும், எந்த காரியத்தையும் சாதிக்க முடியும்" என்ற ஒரு நிலை இருந்து வருகிறது! அதை முதலில் ஒழித்துக் கட்ட பாடுபட வேண்டும்!

மக்களுக்கு நாட்டுப் பற்றைச் சொல்லி, மொழிப் பற்றைச் சொல்லி, இனப் பற்றைச் சொல்லி அவர்களை இலட்சிய ஓட்டர்களாக மாற்றி அமைக்க வேண்டும்!

பசியையும், பஞ்சத்தையும், வறுமையையும், வாட்டத்தையும் பயன்படுத்திக் கொண்டு அவர்களை—பகளை, பட்டி மாடுகளென கருதி விலைக்கு வாங்கும் காங்கிரஸ் நண்பர்களை விரட்டியடிக்க வழி செய்ய வேண்டும்!

சுருக்கமாகச் சொன்னால் தஞ்சை மாவட்டத்து எம். எல். ஏக்கள் அத்தனை பேரும் சட்டசபையில் அமர்ந்து திராவிட நாட்டு விடுதலைக் குரலை கம்பீரமாக எழுப்ப வேண்டும்!

தஞ்சை மாவட்டத்தைப் போலவே பக்கத்திலிருக்கும் திருச்சி மாவட்டமும், அதற்கு பக்கத்திலிருக்கும் நெல்லை மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும், கோவை, சேலம், வடார்க்காடு தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களும் மிக செல்வாக்கோடு நமது இலட்சியத்தை வளர்த்து வருகிறது!

இன்னும் கொஞ்சம் கவனத்தோடு, பக்குவத்தோடும், கட்டுப்பாட்டோடும் செயல் படுத்துவோமானால்—விரைவில் திராவிடம் பிரிந்து விடும்! அதற்கான பணிகளில் உடனடியாக இறங்க வேண்டும்!

செயல் வீரர்களே! இலட்சிய புரியை நோக்கிப் பயணம் செய்யுங்கள்! 'வெற்றி வெற்றி' என்று முழங்குங்கள்!

★

நன்று ! நன்று !

சென்னை முதலமைச்சர் கனம் காமராஜர் கறுப்புக் கொடி பிடிக்க இருக்கும் அறப்போர் வீரர்களைப் பார்த்து மிரட்டி இருக்கிறார்! பயமுறுத்தி இருக்கிறார்!

முன்பு போல் தண்டனை இருக்காது - சிறை பிடிக்கப் பட்ட சில மணி நேரங்களிலோ, சில நாட்களிலோ விட்டு விடுவோம் என்று எண்ண வேண்டாம்! இப்போது கடுமையாகத் தண்டிப்போம், சிறையிலே பெரும் கஷ்டத்தை அனுபவிக்க நேரிடும் என்று நமக்கு எச்சரித்திருக்கிறார்!

காந்தியாரும், நேருவும் அனுபவித்த தண்டனைகளை விட மிகக் கொடுமையாக இருக்குமா? பரவாயில்லை அவ்வளவுபெரிய சீமானே சிறையில் சித்திரவதைபட்ட போது-சோற்றுக்கில்லாத நாங்கள் எங்கே செத்தால் என்ன?

தமிழகத்தைப் பார்த்து மனம் புழுங்கி, புழுங்கிச் சாவதை விட-எதையுமே கண்ணால் பார்க்காமல் சிறையில் சாகும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று தினம், தினம் தவம் கிடப்போம்!

நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இல்லாத ஒரு நாட்டில் வாழ்வதை விட சிறையிலே வாழ்வது ஒன்றும் இழுக்கல்ல, சேவமல்ல, தாழ்நிலையுமல்ல!

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டை கடும் புலி வாழும் காடு நன்று, நன்று!

தந்தி கொடுங்கள்! கட்டளையைவாபஸ் பெற செய்யுங்கள்

எங்கள் மேயர், உங்கள் பாபுவை வரவேற்பார்!

(அண்ணா பேச்சு)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி கெடலாகாது!

தாக்கினால் திருப்பித் தாக்க கூடாது!

தாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தவர்கள் வரலாம்!

தாக்கும் எண்ணமுடையவர்கள் விலாசம் கொடுத்து விட்டு போகலாம்!

விறு விறுப்பு கொண்டவர்கள் வீட்டோடு இருக்கலாம்!

சுட்டால் பிணமாக சாய வேண்டும்! வீரமரணத்தை அணைத்துக்கொள்ள வேண்டும்!

இவர்களுக்கு மட்டுமே போராட்டத்தில் இடமுண்டு!

முதல் அமைச்சர் கனம் காமராஜர் கூறினாராம்—நேருவுக்கு கறுப்புக் கொடி பிடித்த போது சிறையில் போட்டது போல் இந்தத் தடவை சிறையில் போடமாட்டாராம்! அப்படி என்றால் என்ன பொருள்!' அடித்து விரட்டுவோம்', என்பது தானே இதற்கு அர்த்தம்!

ஜப்பான் நாட்டு பிரதமர் கிஷிக்கு எதிராக ஒருபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது! பாராளுமன்றத்தில் இலட்சக் கணக்கான மாணவர்கள், இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்! அந்த ஆர்ப்பாட்டம் அனுமதிக்கப் பட்டது! பலாத்காரம் காணப்பட்ட நேரத்தில், அமைதி குலைந்த நேரத்தில் தடியடி பிரயோகம் செய்தார்கள்! யாரையும் அங்கே துப்பாக்கியால சுடவில்லை! துப்பாக்கியை கொஞ்சமும் அவர்கள் உபயோகப் படுத்தவில்லை!

இங்கே காமராஜர் கூறுகிறார் — "இந்தத் தடவை சிறை பிடிக்க மாட்டோம்" என்று!

இந்தத் தடவை சிறையல்ல தடியடி! ஆம், தடியடிப் படத்தான் இந்த மாநாட்டைக் கூட்டியுள்ளோம்! இலட்சக் கணக்கில் கூடியுள்ளோம்! ஒட்டம் பிடிப்பதற்காக அல்ல!

பாபு ராஜேந்திர பிரசாத் இங்கு 6ம் தேதி தான் வருகிறார் 17ம் தேதி வரையில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்! இப்போதும் ஒன்றும் குடி மூழ்கி விடவில்லை! உங்களிடம் கம்பி இல்லாத் தந்தி இருக்கிறது. பக்கத்தில் இருக்கும் ஐதராபாத்தில் தான் பாபு ராஜேந்திர பிரசாத்தும் இருக்கிறார்! இன்றிரவே தந்தி கொடுங்கள்! புதிய ஆணையை வாபஸ் பெறச் சொல்லுங்கள்! வாபஸ் பெற்றால் முதலில் வரவேற்க எங்கள் மேயர் தான் இருக்கிறார்! இலலை என்றால் முதல் கறுப்புக் கொடியை எங்கள் மேயர் தான் காட்டுவார்! அப்படிப்பட்ட நிலையை உண்டாக்காதீர்கள்!

பாபு ராஜேந்திர பிரசாத்தின் பவனி மிகச் சாதாரணமாக இருக்காது—படைகள் சூழ ஆடம்பர பவனி வருவார்! பிரான்ஸ் நாட்டு மன்னர்களைப் போல் அலங்காரத்தில் சிக்கி இருப்பவர்—ஆனால் அவர் அலங்கார பிரியர் அல்ல, ஆடம்பரத்தை விரும்புபவருமல்ல. இங்குள்ளவர்கள் இங்குள்ளநிலையை எடுத்துச் சொல்லுவதற்கு தைரியம் பிறக்காது.

சென்னையிலிருந்து வெளிவரும் மெயில் பத்திரிகை—"இந்தத் தடவை கிளர்ச்சி செய்யும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை சும்மா விடக் கூடாது, தண்டனையை அதிகப்படுத்த வேண்டும்" என்று எழுதி இருக்கிறது. என்ன ஈவிரக்கம், என்ன தயாள சிந்தை, என்ன பச்சாதாபம்.

பத்திரிகைகாரர்கள் ஒரு விடுதலை இயக்கத்திற்கு தூபம் போடுவார்கள், தலையங்கம் தீட்டி ஆதரவளிப்பார்கள். ஆனால் இங்குள்ள பத்திரிகைகளோ அடக்கு முறைகளை ஏவச் சொல்லுகின்றன. விடுதலைக் கிளர்ச்சியை அடக்கி, ஒடுக்கி நசுக்கச் சொல்லுகின்றன. ஏதோ இந்த ஆட்சியாளர்கள் அடக்கி பழக்கப்படாதவர்கள் போலவும், அடக்கு முறைக்கு புதியவர்களைப் போலவும் நினைத்துக் கொண்டு இந்த மெயில் ஏடு இப்படி அறிவுரை வழங்கி இருக்கிறது.

நம்மீது அடக்கு முறையை வீசும்படி தூண்டிவிடும் மெயில் பத்திரிகையின் கன்னத்தில் அறைவது போல் டில்லி நிருபர் ஒருசெய்தியை அனுப்பி இருந்தார். அதையும் இந்த ஏடு வெளியிட்டிருக்கிறது. தலையங்கத்திற்கு பக்கத்தில்-'டில்லியிலிருந்து ராஜேந்திர பிரசாத தமிழ்நாட்டிற்கு போகப் போகிறார். இந்தத் தடவை தமிழர்களுடைய எதிர்ப்பை நிச்சயமாகப் பார்க்கத் தான் போகிறார்" என்று டில்லி நிருபர் அனுப்பிய செய்தியை அது வெளியிட்டிருக்கிறது.

அடக்குமுறைகளை ஏவிச வேண்டும் என்று எழுதிய அதே மெயில் பத்திரிகை தான் "தமிழர்களின் எதிர்ப்பை, தமிழர்களின் மனக் கொதிப்பை நிச்சயமாகப் பார்க்கப் போகிறார்" என்ற செய்தியையும் வெளியிட்டிருக்கிறது. வெட்கமில்லை, மானமில்லை, ரோஷமில்லை.

மதுவிலக்கைப் பற்றி எழுதிவிட்டு—அதற்குப் பக்

(16ம் பக்கம் பார்க்க)

சிறந்த இடம்!

எல்லாவிதமான உயர் ரக காகிதங்களையும் மிகக் குறைந்த விலையில் வாங்க ஏற்ற சிறந்த இடம்!

இந்தியா பேப்பர் கவுஸ்

எல்லாவிதமான ஸ்டேஷனரி சாமான்களும், என்வலப் கவர்களும் கிடைக்கும்! அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

இந்தியா பேப்பர் கவுஸ்
(ஸ்டேஷனரி & ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்)
683. திருவல்லிக்கேணி ஹைரோடு,
சென்னை-5.

சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி விட்டேன்!

நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்ய புறப்படுங்கள்!

(அண்ணா பேச்சு)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திலே—'அசல் பனங் கலளு, ஆரணா தான் விலை'' என்று விளம்பரம் போட்டால் என்ன பொருள். ஒரு வேளை பத்திரிகைக்காரர்களே அப்பாவிகளாக இருப்பார்களா? ஒரு பத்திரிகையில் என்னென்ன செய்திகள் வருகின்றன என்பது கூட தெரியவில்லை. அப்படிப்பட்டவர்கள் தான் தலையங்கம் எழுதுகிறார்கள். நம்மை அடக்கும்படி தூண்டுகிறார்கள்.

நான் இதுவரை "உணர்ச்சியைக் காட்ட வேண்டும், 'அடக்குமுறைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும்' என்று கூறி வந்தேனே தவிர நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறவில்லை.

"பாபு ராஜேந்திர பிரசாத்திற்கு எதிராக என்ன செய்ய வேண்டும்" என்பதை இன்னும் தீர்மான வடிவில் முடிவெடுக்கவில்லை. நான் இப்போது தான் பத்திரிகைகளைப் பார்த்தேன் நாம் தீர்மானிப்பதற்கு முன்பே—தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி—"திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் நாடு வரும் ராஷ்டிரபதிக்கு கறுப்புக் கொடி பிடிக்க இருக்கிறார்களாம்—அதற்கு பொது மக்கள் ஆதரவு தரக் கூடாது" என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. எல்லா பத்திரிகைகளிலும் வெளி வந்துவிட்ட பிறகு இனி மூடிமறைக்க விரும்பவில்லை.

குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் ஆகஸ்டு 6ம் தேதி முதல் 17ம் தேதி வரையில் தமிழகத்தில் பவனி வர இருக்கிறார்.

தமிழர்கள் தங்களின் மனக் குமுறலை எடுத்துக் காட்டவும் நமக்கிருக்கும் விடுதலை வேட்கையை வெளிப்படுத்துவதற்கும் இந்தி திணிப்பை எதிர்க்கிறோம் என்பதை உணர்த்துவதற்கும்—தமிழகம் வரும் குடியரசுத் தலைவருக்கு நாம் அமைதி சிறிதும் குலையாத வகையில் கறுப்புக் கொடி காட்ட வேண்டும்!

(மாநாட்டில் கூடியிருந்த மக்கள் கடல் கையொலி எழுப்பி, ஆரவாரம் செய்து வரவேற்றது)

நமது கீர்த்திக்கு பங்கம் ஏற்படா வண்ணம், நமது புகழுக்கும், வெள்ளை உள்ளத்திற்கும் ஒரு துளியும் மாசு ஏற்படா வண்ணம்—கறுப்புக் கொடி காட்டுங்கள்—குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி காட்டுங்கள்!

கறுப்புக் கொடி காட்டுகின்ற நேரத்தில் "இந்தி ஒழிக, ஆணையை ரத்து செய்யுங்கள்" என்ற முழக்கத்தைத் தவிர வேறு எதையுமே சொல்லக் கூடாது! 'பாபு ராஜேந்திர பிரசாத் ஒழிக என்றோ, திரும்பிப்போ என்றோ, சொல்லக் கூடாது!

இனி மேல் இதைப் பற்றி விளக்கங்கள் தருவதற்கு நேரமில்லை! நம்மை எப்போது பிடிப்பார்கள் என்று சொல்லுவதற்கில்லை! நம்மை எந்த நேரத்தில் கைது செய்வார்கள் என்றும் கூறுவதற்கில்லை! வீடு திரும்புவதற்கு முன்பு கூட கைது செய்யப்படலாம்! இன்றிரவே கைது செய்து காவலில் வைத்தாலும் வைக்கலாம்!

நாம் கூடி பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில்—நம்மை எப்படிப் பிடிப்பது, பிடிப்பதா வேண்டாமா? என்றெல்லாம் யோசனை செய்து கொண்டிருப்பார்கள்! நாம எதற்கும் தயாராக இருக்க வேண்டும்!

கறுப்புக் கொடி தந்த காட்சி

கண் கொள்ளா காட்சி

அறிஞர் அண்ணா அவர்கள்—அறப்போர் குழு உறுப்பினர்களுக்கும், சில முன்னணி வீரர்களுக்கும் கறுப்புக் கொடிகளைக் கொடுத்த காட்சி கண் கொள்ளா காட்சியாக இருந்தது!

முதலில் போர்க்குழு தலைவர் சம்பத்தை அழைத்து கறுப்புக் கொடியைத் தந்தார்! அடுத்து கருணாநிதியை அழைத்து மதியழகன், அன்பழகன் ஆசைத்தம்பி, மதுரை முத்து, சிற்றரசு போன்றவர்களுக்கும் கறுப்புக் கொடிகளைக் கொடுத்தார்! இறுதியில் சென்னை நகர மேயரின் கையில் கறுப்புக் கொடியைத் தந்தார்! இந்த காட்சி மிக உருக்கமாகவும் உணர்ச்சியையும், எழுச்சியையும் ஊட்டியதாக இருந்தது! கொடிகளைத் தந்த அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியில பேசியதாவது.

நண்பர்களே! உங்களிடம் தந்த கறுப்புக் கொடிகளை சிகப்பாக்கிக் கொண்டு வாருங்கள்! இல்லையேல் பிணமாகி விழுங்கள்!

இங்குள்ளவர்களுக்கு மட்டும் தான் கறுப்புக் கொடிகளைக் கொடுத்தேன்—உங்களுக்கெல்லாம் தரவில்லையே என்று எண்ண வேண்டாம்!

சம்பத்திடம் கொடுத்த கறுப்புக் கொடி, கருணாநிதியிடம் கொடுத்த கறுப்புக் கொடி, மற்ற மற்ற தம்பிமார்களிடம் கொடுத்த கறுப்புக் கொடி உங்களுக்குக் கொடுத்த கறுப்புக் கொடிகளாகும்!

நான் சொல்ல வேண்டியதையெல்லாம் உங்களுக்குச் சொல்லி விட்டேன்! இனி சொல்லுவதற்கு என்ன இருக்கிறது! இனி வீட்டிற்குச் சென்று. நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கலாம்! உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்புவதற்கு தான் நேரம் சரியாக இருக்கும்!

நான் சொன்னதையெல்லாம் மிக நன்றாக கவனம் வைத்துக் கொள்ள வேண்டும்! அமைதி கொஞ்சமும் கெடலாகாது! குடியரசுத் தலைவர் செல்லும் கார்களில் எதையும் வீசக் கூடாது! ஆகஸ்டு 15ம் தேதி கறுப்புக் கொடி பிடிக்கக் கூடாது!

இதைச் செய்பவர்களை துரோகிகள் என்று கூடச் சொல்ல மாட்டேன்! என் தம்பிகள் அல்ல என்று தான் கூறுவேன்! எதிரிகளால் ஏவி விடப்பட்டவர்கள் என்று தான் எண்ணுவேன்!

நீங்களெல்லோரும் அமைதியோடு போராட்டம் நடத்தி, நல்லதொரு வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறுப்பைக் காட்டிக் கொள்கிறோம் என்று கூறிக் கருப்புக் கொடி பிடித்து நம் எதிர்ப்பைத் தெரிவிப்போம். இதுவே சிறை சென்ற தலைவர்களுக்கு நாம் செய்ய வேண்டியது" என்று உணர்ச்சி ததும்பப் பேசியதும், அப்போது உதவி கமிஷனராக இருந்தவரும். இப்போது டிபுடி கமிஷனராக இருப்பவருமான திரு குழந்தைவேலு அவர்கள் திரு வி. க. அவர்களை மோட்டாரிலே ஏற்றி பத்திரமாக வீட்டுக்கு அனுப்பி வைத்து அமைதியையும் ஒழுங்கையும் கட்டுப்படுத்தினார் என்பதை நான் அப்போது உடனிருந்து பார்த்திருக்கிறேன்.

இதையெல்லாம் சர்க்கார் அறியாதது அல்ல. அறிந்தும் இந்தியைத் திணிக்கிறார்கள் என்றால் அதற்குச் சாவு மணி அடிப்போம். போராட்டக் குழு உருவாகி விட்டது. போர் முரசு கொட்டி விட்டது. தமிழர்களே. தாய் மொழிப் பற்றுக் கொண்டவர்களே உங்கள் கடமை, உங்கள் காணிக்கை என்ன என்று தான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. இப்படை தோற்கின் "எப்படை ஜெயிக்கும்" என்று சொல்லும் அறிஞர் தலைமையிலே தோழர் சம்பத் அவர்களைப் போராட்டக் குழுத் தலைவராகக் கொண்டு நாம் நடத்த இருக்கும் போராட்டம் வெற்றி காண இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

வாழ்க தமிழ்!

வீழ்க இந்தி!

வெல்க திராவிடம்!

சாவுமணி அடிப்போம்! —கின்னிவனவன்

★

1938-ம் ஆண்டு விரட்டப்பட்ட இந்தி, 1948-ம் ஆண்டில் துரத்தப்பட்ட இந்தி மீண்டும் மானம், மரியாதை, சூடு சொரணையின்றி தமிழ் நாட்டில தலை காட்டுகிறது. அந்த மொழிக்கு பேசும் ஆற்றல் மட்டும் இருந்தால் இந்தியை வேக வேகமாக மற்ற மாநிலத்தவர் மீது திணிக்கின்றவர்களைப் பார்த்து, "அடப் பாவிகளே, உங்களுக்குத் தான் மானம், மரியாதை, சூடு சொரணையில்லையென்றால் எனக்குமா இல்லை என்று கருதி விட்டீர்கள். 1938-ல் வாங்கிய உதை 1948-ல் ஏற்பட்ட புண் இன்னும் ஆறவில்லை. இதற்குள்ளாக மீண்டும் என்னைத் தமிழ் நாட்டுக்கு அனுப்புகிறீர்களே" என்று கேட்கும். ஆனால் அந்த மொழிக்கும் பேசும் ஆற்றல் கிடையாது. மற்றவர்களைப் பேச வைக்கவும் ஆற்றல் கிடையாது. என் செய்வது! எனவே தான் இந்தி மீண்டும் ஆட்சிப் பொறுப்பிலே உள்ள ஆணவக்காரர்களால், ஏகாதிபத்திய வெறியர்களால் திணிக்கப்படுகிறது. 1938-ம் ஆண்டில் ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த போது இந்த மாநிலத்தில் அவர் இந்தியைக் கொண்டு வந்ததற்கும், படிக்க வேண்டும் என்பதற்கும் அவர் ஓர் விசித்திரமான காரணத்தைச் சொன்னார். அப்போதும் அவர் இந்த நாட்டுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்று கூறப்படும் காரணத்துக்கு முதலிடம் அளிக்கவில்லை. அவர் காட்டிய காரணம், இந்தியாவின் பழய நாகரீகம் சம்ஸ்கிருதத்திலே தான் அடங்கியிருக்கிறது என்றும் சம்ஸ்கிருத படிப்பை அசட்டை செய்யக் கூடாது என்றும், சம்ஸ்கிருதத்தின் மறுவடிவமே இந்தி என்றும், ஆகையால் அதனை எல்லோரும் கட்டாய பாடமாகப் படிக்க வேண்டும் என்றுமே கூறி இந்தியை இங்கு கட்டாய பாடமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்கு இங்கே இருந்த சமஸ்கிருத விற்பன்னர்களும் ஆதரவளித்தனர். ஆனால் தமிழ் மக்கள் புயலெனக் கிளம்பி அப்பொழுதே அந்த முயற்சியை முறியடித்தனர்.

அந்த முயற்சி மீண்டும் 1948-ல் தலை காட்டிய போது அந்த ஆண்டு ஜுலைத் திங்களில் நேரு அவர்கள் சென்னைக்கு வந்தபோது தெளிவாகவும் திட்டவட்டமாகவும் விளக்கி விட்டுப் போனார். "இந்தி மொழியில் சமஸ்கிருதம் கலக்கப்படுவதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒப்புக் கொள்ள முடியாது. மந்திரி சபையில் இது குறித்து விவாதம் வாரின் நான் அதை என்னுடைய முழு பலத்தைக் கொண்டு எதிர்ப்பேன்."

அதே பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் "இந்தி பொது மொழியாக்குவது என்ற திட்டம் இந்தி பேசாத மக்களின் கருத்தறிந்த பின்னர் தான் நடைமுறைக்கு வரும்" என்று வாக்குறுதியளித்தார். இவையனைத்தும் செல்லாக் காசு ஆகின்ற விதத்தில் ராஷ்டிரபதியின் உத்தரவு இன்று பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்த உத்திரவுக்குத் தமிழகம் பணியப் போகிறதா என்பதை காலம் தான் அவர்களுக்குப் பதில் சொல்லப் போகிறது. வடநாட்டு ஆரிய மன்னர்களின் கொட்டத்தை அடக்க அவர்களின் தலையிலே கல்லை ஏற்றி கண்ணகிக்குச் சிலை எழுப்பிய வீரத் தமிழர்களின் வரலாற்றினை இன்று வடவர் மறந்து விட்டதின் விளைவு தான் இத்தகைய தகாத செயல்களைச் செய்து பார்க்கின்றனர். புத்தி கெட்டுப் போன வடநாட்டவர்களுக்கு பாடம் கற்பிக்கவே திராவிட முன்னேற்றக் கழகம் தனது போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறது. தமிழன் முன் வைத்த காலைப் பின்வைக்க மாட்டான். "எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற வள்ளுவர் வாக்கு நினைவில் இல்லாமல் இல்லை. ஆட்சியாளரின் வலிவும் ஆற்றலும் அவர்களது அடக்கு முறைகளும், அராஜகச் செயல்களும் நாம அறியாதது அல்ல. 1938-ல் நாம் பார்த்தது தான். 1948-ல் குடந்தை மண்ணிலே போலீசாரின் மிருக வெறிக்கு ஆளாகி தடிபடி பட்டு மண்டை பிளந்து குருதி கொட்டியதைக் கண்டு நாம் கலங்கிவிடவில்லை! வெற்றிகிட்டும் வரை இறுதிவரைப் போராடினோம். அப்போது இந்தி எதிர்ப்புக்குப் படைத்தளபதியாகவும், சர்வாதிகாரியாகவும் இருந்த அதே நம்முடைய அண்ணா தான் இன்றைய தினம் நம்முடைய கழகத்திற்குத் தலைவராக இருக்கிறார். 1938ம் ஆண்டிலே அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வது போல் இந்தியை எதிர்ப்பதற்கு காவி கட்டிய பண்டாரங்கள் என்று சொல்லக் கூடிய ஈழத்து சிவானந்த அடிகள் அருணகிரி அடிகள், சாமி சண்முகானந்த அடிகள் ஆகியோர் இந்தியை ஒழித்துக் கட்டும் பணியிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டார்கள். நம்முடைய தந்தை பெரியார் ராமசாமி, மறைந்த தமிழறிஞர்கள் திரு வி. கலியாணசுந்தரனார், மறைமலை அடிகள் கி. ஆ. பெ. விசுவநாதம் டாக்டர் தருமாம்பாள், முவலூர் ராமமிர்தம்மையார் டி. ஏ வி நாதன் எம். ஏ. பி. எல் அழகிரிசாமி போன்றவர்கள் எல்லாம் அப்போது ஈடுபட்டனர். அடுத்து 1948-ல் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்பிலே சி டி டி. அரசு அவர்களின் துணைவியார், வேலாயுதம் அவர்களின் துணைவியார் அலமேலு அப்பாத்துரை போன்ற தாய்மார்கள் எல்லாம் பங்கு கொண்டனர் அதே போல் வர இருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு யார் யார் வர இருக்கிறார்களோ நாம் அறியோம் நம்முடைய கழகம் அன்றைய தினம் இருந்த நிலை வேறு இப்போது இருக்கின்ற நிலை வேறு என்பதை ஆட்சியாளர் மறந்து விட்டனர் அவர்களுக்கு நினைவூட்டவே தான் இந்தப் பழங் கதைகளை எல்லாம் மிகச் சுருக்கமாக எழுத வேண்டி நேர்ந்தது.

இந்தி திணிக்கப்படுவதற்கு அவர்கள் கூறும் காரணம், இந்தி இந்த இந்திய உபகண்டத்தில் பெரும்பாலானவர்களால் பேசப்படுகிறது என்று சொல்கிறார்கள், இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. பெரும்பாலும் வடநாட்டில் இந்தி பல்வேறு விதமாகத் திரிபுற்று பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது இந்தி பேசுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பள்ளியிலே படிப்பது, எழுதுவது, வீடுகளிலே, கடைகளிலே கணக்கு எழுதுவது எல்லாம் உருது மொழி தான். இந்த மொழி வலது பக்கத்திலே யிருந்து இடப்புறமாக எழுதுவார்கள். இது தான் வடநாட்டில் பெரும்பாலும் வழக்கத்தில் இருந்து வருகிறது. வடநாடு சென்றவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். நான் புது டெல்லியில் 1943-ம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து பெஷாவர் வரையில் உள்ள பல ஊர்களிலும் சுற்றுப் பயணம் செய்து பார்த்திருக்கிறேன் பெரும்பாலும் உருது மொழியே எழுதும் பழக்கத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்தி என்பது பல்வேறு திரிபுகளைக் கொண்டது என்று முதலிலேயே நான் சொன்னேன், இந்தியை மேல் நாட்டு இந்தி, கீழ்நாட்டு இந்தி. பிகாரி என்று மூன்று விதமாகப் பிரிக்கலாம். மேல்நாட்டு இந்தி என்பது பங்காரு பிரிஜ் பாஷா, கனோஜ், பந்தோலி உருது என்று ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுப் பழக்கத்தில் இருந்து வருகிறது. அடுத்து மேனாட்டு இந்தி என்பது, அவதி, பகேலி, சதீஸ்கர் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு பழக்கத்தில் இருந்து வருகிறது. அடுத்து பிகார் என்பது மைதலி, போஜ்புரி, மகதி என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு பழக்கத்தில் இருந்து வருகிறது இப்படி மொழி வடநாட்டில் 11 வித இந்தி மொழிகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையின்றி பேசப்பட்டு வருகின்றது இதுவன்றி சிந்தி, லந்தி, பஞ்சாபி குஜராத்தி, ராஜபுதானி குமோனி, கடுவாலி நேபாலி, உரியா, பங்காளி, மராட்டி சிறு, காஸ்மீரி, கோகிஸ்தானி, சித்ராலி, திராகி பஷை, கலாஷா, கவர்படி, இந்துஸ்தானி, பார்சி, ஆங்கிலம் முதலிய இருபத்திரெண்டுக்கு மேற்பட்ட தனித் தனி பெரிய மொழிகள் வடநாட்டில் பேசப்பட்டு வருகிறது.

தென்னிந்தியாவில் 'பிகாரியின் பிரிவின் ஒன்றாகிய மைதிலி' மொழியையே இந்தி என்ற பெயரால் நுழைத்திருக்கிறார்கள். அதனையே 25 கோடி மக்கள் பேசுவதாகப் பாமர மக்களிடம் கூறி ஏமாற்றி வருகிறார்கள்! இந்தியாவிலுள்ள மக்களின் தொகையே 44 கோடி என்றால் அதில் மைதிலி மொழி பேசுபவர்கள் 25 கோடி என்றால், மற்ற பெரும் மொழிகளுக்கு எத்தனை கோடி என்பதைச் சிறிது ஆழ்ந்து யோசித்தால் இப்படி பொய் பேசித் திரியும் எத்தர்களின் போக்கியதை நமக்கு நன்கு தெரியும்

எனவே இப்படிப்பட்ட ஒரு மொழி இலக்கண மற்ற மொழி, இலக்கிய மற்ற ஒரு மொழியை அது எந்த ரூபத்தில் திணிக்கப் பட்டாலும் தமிழர்கள் ஒரு நாளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்தியை எதிர்த்து ஒழித்துக் கட்டுகின்ற இறுதிப் போராட்டம் தான் இப்போது நாம் தயார் செய்து கொண்டிருப்பது. 22-8-48-ல் சென்னையில் தலைவர் பெரியார் அவர்களது இல்லத்தின் மேல் மாடியில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே ஆட்சியாளர்கள் போலீசாரை விட்டு பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணா டி பி. வேதாசலம், சி. டி.டி. அரசு மணியம்மையார், கே. கே. நீலமேகம், ஈ வி கே சம்பத் மணிமொழியார் அழகிரிசாமி, டாக்டர் தருமாம்பாள் மூவலூர் ராமாமிர்தம்மையார் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி சி பி எம் அண்ணாமலை மதியழகன், செழியன் கே. வி கே. சாமி, ஜி பி சோமசுந்தரம் பொன்மலை பராங்குசம் கே கோவிந்தசாமி மற்றும் பல நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களுமாகத் 98 பேரை சர்க்கார் கைது செய்து சிறையிலடைத்தது. அன்று மாலை ஜிம்கானா மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற இருந்தது.

எந்த பக்கத்திலும் மக்கள் வெள்ளம் சுமார் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கூட்டம், தலைவர்களும் திரு வி க. அவர்களும் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஏற்கெனவே தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் திரு. வி க. மட்டும் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து நமது பெரியார் இராமசாமி அவர்களும் மற்றும் தோழர்களும் சிறையில் இருக்கிறார்கள். எதற்காக நீங்கள் ஒருவரும் உங்கள் ஆர்வத்தை இழக்க வேண்டாம். அவர்கள் இட்ட கட்டளையை நாம் செய்வோம். நாளை காலம் ஆச்சாரியார் வருகிறார். கட்டாய இந்தி வேண்டாம், அது வடநாட்டு ஆதிக்கத்திற்குத் தென்னாட்டை உட்படுத்துவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சி, இதோ எங்கள்

(16ம் பக்கம் பார்க்க)

இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டீர்கள், சிறைக்குள் தள்ளப்பட்டீர்கள்! என்ருலும் வெற்றி பெற்றீர்கள்! ஆனல், நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதையே நாங்கள் செய்யும் போது—வெள்ளைக்காரன் செய்ததையே நீங்களும் செய்கிறீர்கள்! என்ன விந்தை இது, என்ன விந்தை!

புரியாத புதிராக இருக்கிறது! உலகம் காணுத அதிசயமாக இருக்கிறது!

உண்மையிலேயே நீங்கள் தான் கிளர்ச்சி செய்தீர்களா? நீங்கள் தான் அடிபட்டீர்களா? எங்களுக்கு கொஞ்சம் சந்தேகமாகத் தான் இருக்கிறது! ஒருவேளை இப்போது நீங்கள் செய்வது போல் அப்போதும் கூலிக்கு தான் ஆள் பிடித்து வெள்ளைக்காரனிடம் உதை வாங்கக் கொடுத்தீர்களோ என்னவோ? தமிழகத்தைப் பொறுத்த வரையில் எங்களுக்கு கொஞ்சம் சந்தேகமாகத் தான் இருக்கிறது!

ஏனவே தான் எங்களை நீங்கள் சந்தேகப் படுகிறீர்கள்! எங்களுக்கு போலிஸில்லை, உங்களைப் போல் வலிவில்லை, உங்களைப் போல் உணர்ச்சியில்லை—தப்பாகியைக் காட்டினல் ஓடி விடுவோம், ஒளிந்துக் கொள்வோம் துவண்டு விழுந்து விடுவோம் என்று நினைக்கிறீர்கள்!

எங்கள் மாநாட்டிலே, நடைபெற்ற வீர நிகழ்ச்சிகளை நீங்கள் கண்ணுல் கண்டிருந்தால்—அங்கு நடைபெற்ற உருக்கமான காட்சிகளை நீங்கள் பார்த்திருந்தால் இப்படி சந்தேகப்பட்டிருக்க உங்களுக்கு வழி இருந்திருக்காது!

எங்கள் பெருந் தலைவன் அறிஞர் அண்ணு "என்ன சொல்லப் போகிருர், என்ன சொல்லப் போகிருர்" என்று அவரையே, அவருடைய முகத்தையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்த மக்கள் கடலை நீங்கள் பார்த்திருந்தால்—'கறுப்புக் கொடி பிடிக்க வருவீர்களா—கால்கள் போகும், கரங்கள் ஒடியும்—கவலைப் படாமல் வருவீர்களா" என்று எங்கள் அண்ணு கேட்ட போது—"வருவோம், வருவோம்" என்று குரல் எழுப்பிற்றே—அந்த மக்கள் கடல் ஒலித்த ஓசையை நீங்கள் கேட்டிருந்தால் இப்படி சந்தேகப் பட்டிருக்க மாட்டீர்கள்!

மாவீரன் சம்பத்தை அழைத்து, எதற்கும் கலங்காத கலைஞர் கருணநிதியை அழைத்து, மதியழகனை அழைத்து, அன்பழகனை அழைத்து, ஆசைத்தம்பியை அழைத்து, மதுரை முத்துவை அழைத்து அம்பில் தருமலிங்கத்தை அழைத்து, சிற்றரசை அழைத்து, கோவை ராஜமாணிக்கத்தை அழைத்து—அவர்களின் கரங்களிலே கறுப்புக் கொடிகளை கொடுத்து உங்கள் கரங்களிலே கறுப்புக் கொடிகளைக் தருகிறேன்—அதை சிகப்பாக்கி, ரத்தமாக்கி எடுத்து வாருங்கள்—இல்லையேல் பிணமாகி வீதியிலே விழுங்கள்" என்று எங்கள் அண்ணு கட்டளையிட்ட போது தலைவன் கொடுத்த கொடிகளை வாங்கிக் கொண்டு, மேடையிலே வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்தார்களே அந்தக் காட்சியை நீங்கள் கண்டிருந்தால் அப்போதே நீங்கள் கதி கலங்கி போயிருப்பீர்கள்!

எங்கள் மேயர் அப்துல்காதரை தனியாக அழைத்து "முதல் கறுப்புக் கொடியை மேயர் தான் காட்டுவார்" என்று கூறி—உங்களுக்கு வரவேற்பு தந்து, உங்களை அன்போடு அழைத்து வர வேண்டிய கரங்களிலே கறுப்புக் கொடியை கொடுத்த காட்சியை நீங்கள் கண்டிருந்தால் "என்ன விபரீதம், என்ன விபரீதம்—நாளை அமையப் போகும் மந்திரி சபையின் கரங்களிலும் இந்தக் கொடிகள் இருக்குமோ" இந்த கொடிகள் இருக்குமோ என்று உங்கள் உள்ளத்தை யெல்லாம் வாட்டி வதைத்திருக்கும்!

ஆனல் அதனை வலிவிருந்தும் நாங்கள் அஹிம்சையில் காந்தியாகவே இருப்போம்!

கறுப்புக் கொடி காட்டப் போகும் கழக வீரர்கள் அடிபடுவார்கள்—ஆனல் அடிக்க மாட்டார்கள்! உதை படுவார்கள்—ஆனல் போலீஸ்காரர்களின் உற்ற நண்பர்களாகவே இருப்பார்கள்! இது உறுதி! இது உறுதி!

ஆனல், வரவேற்பு என்ற பெயரில் காங்கிரஸ்காரர்கள் பெரும் கலகம் விளைவித்து, கழகத் தோழர்களை பலாத்காரத்திற்கு இழுக்கலாம்! தொண்டர்கள் என்ற பெயரில் உங்களை வீடு புகுந்தும் உதைக்கலாம்! அப்போதும் உங்கள் கரங்கள் கட்டப்பட்டு தான் இருக்க வேண்டும்! காந்தியார் பிறந்த நாட்டிற்கு நாமாவது மதிப்புத் தந்தோம், மரியாதையைத் தருவோம்!

காங்கிரஸ்காரர்கள் எதை வேண்டுமானுலும் செய்யட்டும்! அதை நாம் சகித்துக் கொள்ளுவோம். தாங்கியும் கொள்ளுவோம்!

ஆனல், இன்னும் இரண்டு ஆண்டுகளில் 1962 வருகிறது என்பதை மட்டும் அவர்கள் நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்!

நம்மை ஒரு அடி அடித்தால் அங்கே ஒரு எம். எல். ஏ. காலி—இரண்டு அடி அடித்தால் இரண்டு எம். எல். ஏக்கள் காலி-பத்து அடி அடித்தால் பத்து எம். எல். ஏக்கள் காலி—நம்மில் யாராவது ஒரு கரத்தை இழந்தால் அங்கே ஒரு மந்திரி அவுட்—நம்மில் யாருக்காவது இரண்டு கால்களும் போனல் அங்கே இரண்டு மந்திரிகள் காலி! நம்மில் பத்து பேர்கள் பிணமாகி விழுந்தால்-அங்குள்ள அத்தனை மந்திரிகளும் காலி! இதை நாமும் உணர வேண்டும், அவர்களும் உணர வேண்டும்!

நம்முடைய தலைவர்களை யெல்லாம் கைது செய்து சிறை பிடித்து வைத்தாலும் நாம் அமைதியை இழக்கக் கூடாது! கடமையை செய்யும் போலிஸ்காரர்களுக்கு வீண் தொல்லைகளைத் தரக் கூடாது!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளை கடை பிடித்து-அமைதியான முறையில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு கறுப்புக் கொடிகளைக் காட்டி "வெற்றியோடு திரும்பி வருக, வெற்றியோடு திரும்பி வருக" என்று உங்களை வழி கூட்டி அனுப்பி வைக்கிறேம்!

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

புகழ்வார்கள். ஏனெனில் அவ்வளவு அழகாக, தமிழ் ஆங்கிலம் அது தவிர ஏதாவதொரு இந்திய மொழி மூன்றும் தான் தமிழகத்தில் கற்றுத் தருகின்ருர்கள் என்று தான் எண்ணிப் பெருமைப்படுவார்கள்.

ஆனல் தமிழகத்துப் பள்ளியில் படிக்கும் சிறுவனை பார்த்தால், என்னடா இது நமது கல்வி மந்திரிக்கு நம் பள்ளியில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆக மூன்று மொழிகள் சொல்லித் தருகின்ருர்கள் என்பதைக் கூட எடுத்துச் சொல்லத் தெரியவில்லை, அதற்குப் பதிலாகச் சுற்றி வளைத்து, ஏதாவதொரு இந்திய மொழி ஒன்று கூறுகின்ருரே? இது கூட வா இவருக்குத் தெரியாது என்று கேலியாக எண்ணுவான்.

சற்று புத்திசாலி மாணவனுக இருந்தால் கல்வி அமைச்சரின் பேச்சை எடுத்துச் சென்று தனது தலைமை யாசிரியரிடம் காட்டி தனக்கு இந்தி தவிர வேறு மொழி, தெலுங்கோ கன்னடமோ மலையாளமோ சொல்லித் தர ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்பான். அப்படிக் கேட்டால் அந்தத் தலைமையாசிரியர் அரசாங்க ஊதியம் பெறுபவர் என்ருலும் அமைச்சரைப் பற்றி என்ன நினைப்பார், இப்படிப்பட்ட பித்தலாட்டக்காரரையா நாம் கல்வி அமைச்சராகப் பெற்றேம் என்று கவலைப்பட மாட்டாரா? ஆனல் நமது அமைச்சர் தான் அவசரக்காரராமே அதனுல் அந்த அவமானம் தனக்கு வந்து சேரும் என்பதைக் கூட அவர் எண்ணிப் பார்த்திருக்க மாட்டார் என்று தான் கூறுகின்ருர்கள்.

அமைச்சரின் இந்த வாதம், தான் ஏதோ எதிரிகளை அடித்து வீழ்த்தி விட்டதாக நினைத்துக் கொண்டு பேசியதாகத் தெரிகின்றது. ஆனல் நாம் அவரது வாதத்தில் உள்ள வாசகங்களைக் கண்டு பரிதாபப்படுகின்றேம். ஏனெனில் அவருக்குப் பின்புறம் அவரை ஆதரிக்க சட்ட மன்றத்தில் நூற்றைம்பது பேர் உட்கார்ந்துள்ளனர். பெரிய அதிகாரம் அவர் கையில் உள்ளது. நல்ல போலீசு உள்ளது. மத்திய சர்க்காருக்கு மனுச் செய்தால் ராணுவமும் அவர் உதவிக்கு வரக் கூடும். இவ்வளவு அந்தஸ்து அவர் பெற்றிருந்தும் இந்தியைத் தான் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் கட்டாயமாகச் சொல்லித் தருகிறேம் என்கிற கண்களுக்கு எதிரே தெரிகின்ற சாதாரண உண்மையைக் கூட எடுத்துச் சொல்ல தைரிய மற்றவராக அவர் உள்ளதைக் காணும் போது நாம் பரிதாபப்பட வேண்டியே உள்ளது. அவரைப் பிடித்துள்ள அந்தப் பதவி மோகம் அவர் உண்மையைப் பூசி மறைத்து வார்த்தைகளை சரிக்காட்டும் படிச் செய்கின்றது.

பள்ளி மாணவனிடம் கூடத் தான் அவமானப்பட வேண்டுமே என்கின்ற எண்ணம் சிறிதளவாவது அவருக்கு இருக்குமேயானல், உண்மையை மறைத்தாவதுதான் அமைச்சராக இருக்க வேண்டும் என்கின்ற பரிதாப நிலையில் அவர் இருந்திருக்கமாட்டார்.

பலப்பல தவறுகளைத் தமிழகம், அவரது பரிதாப நிலை குறித்தே மன்னித்து வந்தால் அவர் மேலும் மேலும் தவறிழைத்துக் கொண்டே போகின்ருர். எதில் அவர் தவறு செய்தாலும் தமிழகம் தாங்கிக் கொள்ளும். ஆனல் தனது உயிருக்கும் மேலாக மதிக்கும் தனது தாய் மொழியாம் தமிழை அழிக்க எண்ணங் கொண்டு இங்கு ஆந்தி புகுத்தப் படும் கொடுமையை மட்டும் இந்த நாடு தாங்கிக் கொள்ளாது என்பதை மட்டும் நிதியமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

தமிழகம் இனி தாங்காது !

க. இராசாராம், பி. ஏ.

போர்க் கொடி உயர்ந்து விட்டது. பாளையத்து முடிவு நமது கழகக் காளையரின் எண்ணங்களில எல்லாம் புகுந்து களிப்பு கொள்ளச் செய்து விட்டது. கழகத்தின கட்டளையை எதிர் பார்த்து ஏங்கிக் கிடந்தவர்களின் மனதில் எல்லாம் இன்று மகிழ்ச்சி பொங்கி வழிகிறது. போர் ! போர் !! அறப்போர் !!! என்ற முழக்கம் தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் கேட்கத் தொடங்கிவிட்டது. வீர மறவர் தம் துணைவியரிடம் விடை பெற்றுக் கொள்ளும் காட்சி தமிழகமெங்கிலும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. வீரத் தாய்மார்கள், தாய்மொழிக் காக்கப் புறப்படும் மகனுக்கு. வெற்றி வாழ்த்துக் கூறி அன்புக் கரங்களால் ஆரத்தழுவி விடை கொடுத்தனுப்பும் காட்சிகளும் நாடெங்கிலும் நடைபெறத் தொடங்கி விட்டது.

வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கும் வயதான கிழவர், தனது பேரனிடம் கேட்கின்றார். என்னப்பா ! தமிழை அழிக்க இந்திப் பேய் வருகின்றதாமே உண்மையா ? என்று பேரன் தான் பள்ளியில் படும் வேதனையை, அந்த மொழியை உச்சரிக்க முடியாமல் திண்டாடும், தன்மையை. எழுத இயலாமல் தொல்லைபடும் செயலை எடுத்துரைக்கிறான். 'தமிழை அழிப்பவர்களைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று கூறி அந்த முதுகிழவரும் அறப்போரில் குதித்திடத் தயாராகின்றார்.

தமிழகமே பெரியதொரு அறப்போராட்டத்திற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கும் தன்மை இன்று நாடெங்கிலும் நாம் காணலாம். ஆனால் அதே தமிழகத்தின் சங்கம் வளர்த்த மதுரையில் சிலர் கூடினர். அவர்கள் பாளையத்து முடிவு கண்டு கிலி கொண்டோர் பாளையத்தின் வேகத்தைச் சமாளிக்க முடியாத கோழைகள். பாளையத்தின் வீர முடிவை ஏற்கொள்ளப் பயந்தவர்கள் அவர்கள் தங்கள் இயலாமையைக் காட்டிக் கொள்ள மறுத்து மக்களை ஏமாற்றத் திட்டமிட்டனர்.

புதிய கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர். இந்தியா ? எங்கே ? என்று எதுமறியாதார் போல் கேட்க ஆரம்பித்துள்ளனர். தமிழகத்தில இந்தி என்றைக்கும் கட்டாய பாடமாக இருக்காது என்று கதை பேசத் தொடங்கியுள்ளனர். தமிழுக்குக் கழகத்தவர் தான் பகைவர்கள் என்று புதுப்புரளி கிளப்பப் பார்க்கின்றனர். தமிழைக் கெடுபவர்கள் கழகத்தின காவலர்களே என்று பேசத தொடங்கியுள்ளனர்.

இன்னமும் பத்தாண்டுகள் படித்தாலும் முயன்று முயன்று பேசினாலும், அழகாகவோ, அடுக்குச் சொலலாலோ பேசத் தெரியாத ராமையா போன்ற வாசள்கூட நமக்கு உபதேசம் செய்யப்புறப்பட்டு விட்டார்கள். கேலி பேசிப் பார்க்கிறார்கள். தாங்கள் பேசும் விசித்திரமான பேச்சுகளால் நமது அண்ணாவை கலங்கச் செய்து விடலாம் எனவும் முயற்சிக்கிறார்கள். ஆம் அண்ணா அவர்கள் தற்போது கலங்கிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். தமிழ் நாட்டின் அமைச்சர்களாக ஆபடிப்பட்ட விசித்திரங்கள வந்து அமைந்து விட்டதே என்பதை எண்ணி எண்ணிக் கலங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

சங்கம் வளர்த்த மதுரையில் கூடிய காரணத்தாலேயே தாங்கள் பெரும் புலவர்களின் நிலையை அடைந்துவிட்டதாக பல அமைச்சர்கள் தங்களுக்குள்ளாகக் கருதிக் கொண்டவர்களைப் போல் இன்று தமிழகத்தில் காட்சி அளிக்கின்றனர்.

வடக்கு வாழ்கின்றது, தெற்குத் தேய்கின்றது என்பதை நமது கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், மன்றத்தில் எடுத்துரைத்த போது தெற்கு தேய்ந்திருக்கின்றதா ? எங்கே தேய்ந்திருக்கின்றது ? என்று வாய்கிழியக் கத்திய இந்த மேதாவிகள். மதுரையில் கூடி தென்னகத்தில் கனரகத் தொழிற்சாலைகட்கு வழி செய்ய வேண்டும் என்று தங்களது வடநாட்டு எஜமானர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்தக் கூட்டத்தில் இருந்த எந்த ஒரு அறிவாளியும், வளர்ந்திருக்கும் தெற்கிற்கு எனப்பா மேலும் கனரகத் தொழிற்சாலை ? என்று கேட்டதாகத் தெரியவில்லை. தமிழகத்தின் மக்கள் அத்தனைப் பேரும் சிந்தனை சக்தியை இழந்து விட்டார்கள் என்றே இந்த அதிமேதாவிகள் கருதிக் கொண்டு செயல் செய்யப் புறப்பட்டிருக்கின்றனர். மக்கள் மன்றத்தில் இதுவரையில் அறியாமையில் மூழ்கிக் கிடந்த தங்களை தி. மு. க. வினர் தான் தட்டி எழுப்பினர் என்ற உண்மையை இவர்கள் கூறாவிட்டாலும். இதுவரை இவர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டாத தன்மையை எடுத்து மக்கள் மன்றத்திலே கூறி மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலையிலே உள்ளார்கள்— என்பதையே அந்த தீர்மானம் எடுத்துக் காட்டுகின்றது.

எந்தத் தவறு செய்தாலும் தமிழக மக்கள் அதைப் பெருந்தன்மையுடன் மன்னித்தே வந்திருக்கின்றனர். இதற்கு எடுத்துக் காட்டு நமது செங்குட்டபாளையம் சீமான் சுப்பிரமணியம் அவர்கள் இன்னமும் இந்த நாட்டில அமைச்சராக இருப்பதேயாகும். தமிழக மக்களின் வாழ்வையே பாழ்படுத்த வேண்டும் என்கிற தன்மையில் கொண்டு வரப்பட்ட குலக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்திய வரும் இதே அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களே தான், அதைக் கொண்டு வந்தவர் ஆச்சாரியார் என்ற காரணத்தினால் இவர் எப்படியோ தப்பித்துக் கொண்டாரே தவிர இல்லையெனில் அந்தத் திட்டத்தின் மேம்பாடுகளை நாட்டு மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லி பிரச்சாரம் செய்த குற்றத்திற்காகவும், அதை அமுல் செய்த குற்றத்திற்காகவும் தமிழகம் அவரை ஆச்சாரியார் அவர்களுடனேயே அமைச்சர் அவையில் இருந்து அனுப்பி வைத்திருக்கும் அதில் எப்படியோ தப்பியவர் பேலும், மேலும் தமிழக மக்களுக்குக் கெடுதல் செய்யும் பணியையே தொடர்ந்து செய்து கொண்டு வருகின்றார்கள்.

சட்ட மன்றத்தில் எல்லா கட்சியினரையும் கூட்டி இந்திக்கு ஆதரவு திரட்ட முயன்றார்கள் ! அதிலும் தோல்வியே கண்டார்கள்.

அதன் பிறகும் நிதியமைச்சர் அமைதியாக இருப்பதாகத் தெரியவில்லை.

வாழ்க்கையிலே அவர் ஒரு வழக்கறிஞர் வழக்கறிஞர்கள தொழில்காரணமாகவும் தங்கள் திறமை காரணமாகவும் பல வேலைகளில் நல்லவற்றிற்குப், சில வேலைகளில் கெடுதல்களின் சார்பிலும் ஆஜராகி வாதாடுவது வழக்கம். நமது நிதியமைச்சர் சரியாகவோ தவறாகவோ இதுவரை நல்லவற்றிற்கு ஆஜராகி வாதாடியதாகத் தெரியவில்லை.

தமிழகத்திற்குத் தான் அவர் நிதியமைச்சர் தமிழக கஜானா தான் அவருக்கு ஊதியம் தருகின்றது. அந்த கஜானாவுக்கு வந்து சேரும் பணம் தமிழக மக்களின் வரிப் பணமாகும்: இருந்தாலும் அவர் தன்னுள்ளத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற சிறந்த அடிமை மனப்பான்மை அவரை தமிழக மக்களின் சார்பில் வாதாட வைக்கத் தவறிக் கொண்டே வருகின்றது.

தமிழக அரசியலை, ஊன்றிக் கவனிப்போமானால் இவரது உளப்பாங்கு நன்கு புரியும். தமிழ்நாட்டு வளத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆயிரம் கோடி தேவை என அறிஞர் அண்ணா அவர்கள் திட்டம் தந்தார்கள.

அண்ணா அவர்களின் திட்டம் என்றதும் ஒரு அருவை அவர் மனத்தில் தோன்றி இருக்க வேண்டும். ஏனெனில் அந்தத் திட்டத்தின் முழு தன்மையையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கூட, அதை எதிர்த்தும், கேலி செய்தும் நாடெங்கிலும் பேதித் தள்ளினார், அவரது பேச்சு முடிவடைவதற்குள் 'இரண்டாயிரம் கோடி தேவை' என்று கேட்டு விரு. லோகநாதன் கூறியதும் இவர் சென்ற திக்கே தெரியாமல் போயிற்று.

எதிலும் இவர் அவசரப்பட்டுபவர் என்று கூறுகின்றார்கள். உண்மைதான் ஆனால் அவரது அவசரத்தின் தன்மை ஒரு முறை கூட வட நாட்டுப் பக்கம் திரும்பியதா ? என்று பார்த்தால் அதற்கு ஒரு சாதாரணச் சம்பவம் கூடத் தென்படவில்லை. அவரது அவசரமான வாதங்கள் முழுவதும் தமிழகத்தைத்தேய்க்கப் பயன்படுகின்றதே தவிர, இந்த நாட்டின் மேன்மைக்கோ உயர்வுக்கோ, சிறப்புக்கோ. துளியும பயன்படவில்லை.

தொடர்ச்சியாக தமிழர்களின் வீழ்ச்சிக்கே தனது மூளையைச் செலவழிப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டவர் போல் சுனம் நிதியமைச்சர் இன்று மொழி சம்பந்தமாகவும் பேசத் தொடங்கி யுள்ளார்.

மதுரையில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியுள்ளார்.

அந்தத் தீர்மானம், இந்தியக் குடியரசுத் தலைவரின் அறிக்கை நியாயமானது என்கின்ற தன்மையில் அமைந்துள்ளது. அது பற்றிப் பேசுகையில் அவசரத்திற்குப் பேர் போன இந்த அமைச்சர் 'தமிழகத்தில் இந்தி திணிக்கப்படவிலலை; தமிழும் ஆங்கிலமும் படிக்க வேண்டும்; அது தவிர ஏதாவது ஒரு இந்திய மொழிதான் இங்கு போதிக்கப் படுகின்றது' என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாதத்தை யாராவது வெளிநாட்டுக்காரர்கள் பார்த்தால், இந்த நாட்டுக் கல்வி அமைச்சர் எவ்வளவு அருமையாகப் பேசியிருக்கின்றார் என்று

(18ம் பக்கம் பார்க்க)

egistered as a News Paper in CEYLON

இலங்கையில் 40 சதம்

Regd. No.M. 7074 MALAIMANI விலை 30 காசு Phone 83285

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.